பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

*Volume: 40 Issue: 01 January 2019*

*Bro. Mohan C. Lazarus*



2019 வெற்றியின் ஆண்டு!

## காரிய சித்தியோ கர்த்தரால் வரும்.

நீதிமொழிகள் 16:33.

2019 Year of Success!

## Success will come from the Lord.

Pro. 16:33.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...

**இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில்,**
**உங்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

இந்த 2019ம் ஆண்டில், உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக **உங்களுக்காக ஜெபிக்கிறேன்.** கர்த்தர் இந்த ஆண்டிற்காக வாக்குக் கொடுத்தபடியே, உங்களுடைய காரியங்களை எல்லாம் வாய்க்கச் செய்வார்! அந்த வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கி, **தினமும் அந்த வாக்கைச் சொல்லி ஜெபியுங்கள்.**

**இந்த ஆண்டு, உங்களுக்கு வெற்றியின் ஆண்டு!** உங்கள் காரியங்களை எல்லாம் கர்த்தர் ஜெயமாக்குவார்! **ஜெபிக்கிறவர்களுக்குத்தான் ஜெயம் உண்டாகும்!** உங்கள் **ஜெப நேரத்தை அதிகப்படுத்துங்கள்.** வரப் போகிற எழுப்புதலுக்காக **ஜெபியுங்கள்.** எல்லோரும் இரட்சிக்கப்பட **ஜெபியுங்கள்.**

இம்மாதம் (2019) **ஜனவரி 4**ம் தேதி, **கன்னியாகுமரியில்** கடற்கரை ஓரத்தில் கூடி, **12 மணி நேர முழு இரவு ஜெபம்** செய்ய இருக்கிறோம். தேவ மனிதர்கள், அன்பு சகோதரர் **வின்செண்ட் செல்வக்குமார்,** சகோ. **கார்த்தி கமாலியேல்** மற்றும் எல்லா திருச்சபை மேய்ப்பர்கள், திருச்சபைத் தலைவர்கள், விசுவாசிகள் கூடி வந்து ஜெபிக்கப் போகிறோம்.

சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கூடி வந்து ஜெபிக்கப் போகிற இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜெபத்தில் **நீங்களும் கட்டாயம் பங்கு பெற்று ஜெபிக்க வேண்டும்.** குடும்பமாக வாருங்கள்! குழுவாக வாருங்கள்! **எழுப்புதல் காலம் நெருங்கி விட்டது!** நீங்களும் எழுப்புதலில் பங்கு பெறு வாருங்கள்!

தொடர்ந்து **ஜனவரி 14,15,16** ஆகிய தேதிகளில், **(3 நாட்கள்) உபவாசித்து,** கர்த்தராகிய தேவன் வெளிப்படுத்திய தீர்க்கதரிசனக் காரியங்களுக்காக ஜெபிக்கப் போகிறோம். தேவனுடைய கூடாரத்தில் கூடி **ஜெபிக்க நீங்களும் வாருங்கள்.**

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

செவ்வாய் கிழமைதோறும் **திருகோணமலையில்** தேசத்திற்காக ஜெபிக்க **காலை 9:30** - மதியம் **2:00** மணிவரை சிறப்பு ஜெபம் நடைபெறுகிறது. கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

“எழுப்புதல் செய்தியை, இயேசு கிறிஸ்துவின் வருகைக்குரிய செய்தியை உலகமெங்கும் துரிதமாக எடுத்துச் செல்ல வேண்டும்.” என்று கர்த்தராகிய தேவன் கட்டளையிட்டபடியினால், ஆவியானவரின் வழி நடத்துதலின்படியே, **‘COMFORTER T.V.’** என்கிற ஒரு **Web T.V.,** ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**இது உலகின் பல மொழிகளிலும் தேவ செய்தியைக் கொண்டு செல்கிற கருவியாக செயல்படும்.** இதற்கு தேவ பிள்ளைகளும், கருவிகளும் தேவை. இவைகளுக்காக **ஜெபியுங்கள்.**

வரப் போகிற எழுப்புதலுக்காகச் செய்ய வேண்டிய அனேக வேலைகளைப் பற்றி கர்த்தர் சொல்லி இருக்கிறார். அவைகளை எல்லாம் இந்த ஆண்டு செய்து முடிக்க வேண்டும். இதற்கு, **உங்கள் ஜெபம் அதிகமாகத் தேவை.**

தேவனுடைய கூடாரத்திலும், ஜெப மலையிலும் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

உங்கள் வீட்டில் இருக்கிற **சிறு பிள்ளைகள்** மற்றும் **வாலிபப் பிள்ளைகள் மீது அதிகக் கவனம் செலுத்துங்கள்.** அவர்களுடைய **பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.** அவர்களுக்காக **நாங்களும் ஜெபிக்கிறோம்.**

எனக்காக, **‘இயேசு விடுவிக்கிறார்’** ஊழியக் குடும்பத்திற்காக **ஜெபியுங்கள்.**

கிருபை உங்களோடு இருப்பதாக!



உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019 வெற்றியின் ஆண்டு!

# காரிய சித்தியோ கர்த்தரால் வரும்.

நீதிமொழிகள் 16:33.




ஒரு சமயம், ஒரு தகப்பனார் தன் மகளுக்காக ஜெபிக்கும்படியாக என்னிடத்தில் வந்தார். அப்பொழுது, "ஐயா, என் மகள் பட்டப் படிப்பு படித்திருக்கிறாள். அவளை நான் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் படிக்க வைத்தேன். அவளுடைய வேலைக்காக நான் எவ்வளவோ பிரயாசப்படுகிறேன். அவளும் அதற்காக முயற்சிக்கிறாள். ஆனால், ஒரு வேலையும் அவளுக்கு வாய்க்கவில்லை!

'சரி, வேலைதான் கிடைக்கவில்லை! திருமணத்தையாவது செய்து வைத்து விடலாம்!' என்று, அதற்கு முயற்சித்தேன். பல வரன்கள் வந்தது. வாய்ப்பது போலத் தெரியும்! ஆனால் கடைசி நேரத்தில், அது சித்தி பெறாமல் தடைப்பட்டுப் போய் விடும்!

'சரி, வேலையும் வாய்க்கவில்லை! திருமணமும் சித்திக்கவில்லை! வெறுமனே வீட்டில் சும்மா இருப்பதற்குப் பதிலாக, மேல் படிப்பாவது படிக்கட்டும்!' என்று அதற்காக முயற்சி செய்தேன். ஆனால், அதுவும் வாய்க்கவில்லை! எல்லாமே தடைப்பட்டு, தடைப்பட்டுப் போகிறது! ஒரு நன்மையும் வாய்ப்பதில்லை!" என்று சொல்லி, மிகவும் மனம் கலங்கி அழுதார்.

எத்தனை வேதனை பாருங்கள்! காரியம் சித்திக்காதபடியினால் உண்டான வேதனை!

நான் அவருக்கு ஆறுதல் சொல்லி, "நமக்கு ஒரு தேவன் இருக்கிறார்! அவர் நம்முடைய காரியங்களைச் சித்திக்கச் செய்கிறவர்! நாம் விசுவாசத்தோடு ஜெபித்தால், அவர் காரியங்களை நமக்கு வாய்க்கச் செய்வார்!" என்று சொல்லி, கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அவருக்குக் காண்பித்து, அவரை தைரியப்படுத்தி, அவருக்காக ஜெபித்து அனுப்பினேன். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைப் பார்த்து, சந்தோஷம் அடைந்தவராக, மிகுந்த விசுவாசத்தோடு கடந்து போனார்.

சில நாட்கள் கழித்து, திரும்பவும் அவர் என்னைப் பார்க்க வந்தார். கையில் தன்னுடைய மகளுடைய திருமண அழைப்பிதழோடு வந்தார். அப்பொழுது நான், "உங்கள் மகளுக்கு திருமணக் காரியம் வாய்த்து விட்டதா?" என்று அவரிடத்தில் கேட்டபோது, "திருமணக் காரியமும் வாய்த்து விட்டது! அவளுக்கு நல்ல ஒரு வேலையும் கிடைத்து விட்டது!" என்று மகிழ்ச்சியோடு கூறினார்!

பாருங்கள், கர்த்தருடைய **வாக்குத்தத்தத்தை விசுவாசித்து ஜெபித்தபோது, கர்த்தர் அற்புதம் செய்தார்!**

இதை வாசிக்கிற உங்களுக்காக, **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்தோடு தொடர்புடைய மக்களுக்காக இந்த 2019ம் ஆண்டின் வாக்குத்தத்தத்திற்காக நான் தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது கர்த்தர், உங்களுக்காக இந்த வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்தினார்.

**"காரிய சித்தியோ கர்த்தரால் வரும்."** நீதி. 16:33.

**இதுவரை தடைப்பட்டு நிற்கிற காரியங்கள் எல்லாம், இந்த 2019ம் ஆண்டில் உங்களுக்கு சித்தி பெறும்!** அதாவது, வாய்க்கும்! உங்கள் காரியங்கள் வாய்க்கும்! உங்களுக்கு ஜெயம் உண்டாகும்!

**இந்த 2019ம் ஆண்டு, உங்களுக்கு ஒரு வெற்றியின் ஆண்டாக இருக்கும்!** (YEAR OF SUCCESS!)

வேலை தேடித் தேடி, களைத்துப் போனீர்களோ? **ஆசீர்வாதமான வேலைக்கு வழி திறக்கும்!**

உங்கள் பிள்ளைகளின் திருமணக் காரியங்கள் வாய்க்காதபடியினால் கலங்கி நிற்கிறீர்களோ? **ஆசீர்வாதமான வாழ்க்கையை கர்த்தர் அமைத்துத் தருவார்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீடு கட்டுகிற காரியம் தடைப்பட்டபடியினால் சோர்ந்து போனீர்களோ? **கர்த்தர் கட்டி முடித்துத் தருவார்!**

உங்கள் தொழில் காரியம் வாய்க்காதபடியினால், வருமானம் இல்லாமல் அங்கலாய்க்கிறீர்களா? **கர்த்தர் ஆசீர்வாதமான தொழிலுக்கு வழியைத் திறந்து தருவார்!**

நீங்கள் செய்கிற ஊழியத்தில், கர்த்தர் கொடுத்த தரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் நிறைவேறாதபடியினால் சோர்ந்து போனீர்களோ? **கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தரிசனங்களை வாய்க்கச் செய்வார்! அவருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதைக் காண்பீர்கள்!**

ஒரு குழந்தைக்காக நீங்கள் எடுத்த முயற்சியெல்லாம் தோல்வியடைந்து, அதன் நிமித்தமாக உண்டான அவமானத்தினால் கண்ணீர் வடிக்கிறீர்களோ? **அழாதீர்கள்! வெட்கத்திற்குப் பதிலாக, உங்களுக்கு இரண்டத்தனையான பலன் வரும்!**

"எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வி! வாழ்க்கையில் முன்னேற நான் பட்ட பிரயாசங்கள் எல்லாம் தடைப்பட்டுப் போனது." என்று சொல்லி, உங்கள் எதிர்காலத்தைக் குறித்து பயந்து கொண்டிருக்கிறீர்களோ?

**கலங்காதீர்கள்!** உங்களுக்கான கர்த்தருடைய வேளை வந்து விட்டது! **உங்களுடைய காரியங்கள் எல்லாம் வாய்க்கும்!** உங்களுக்கு வழி திறக்கும்! உங்களுக்கு ஜெயம் உண்டாகும்! **உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!**

உங்களை நேசிக்கிற கர்த்தராகிய தேவன், உங்களுக்கு வாக்குக் கொடுத்து விட்டார்! அவருடைய அந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான்! உங்களுக்குத்தான் காரியம் வாய்க்கும்! உங்களுக்குத்தான் கர்த்தர் அற்புதம் செய்யப் போகிறார்!

**விசுவாசியுங்கள்!**

அந்த **வாக்குத்தத்தத்தை** உங்களுக்குச் **சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்!**

அந்த வாக்குத்தத்தத்தை **உரிமை பாராட்டுங்கள்!**

அந்த வாக்குத்தத்தத்திற்காக, கர்த்தரை **துதியுங்கள்!**

அந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி **ஜெபியுங்கள்! அற்புதங்களைக் காண்பீர்கள்!**

ஆண்டவரே, நீர் என்னை நேசிக்கிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

இந்த வருடத்திற்காக, நீர் எனக்குத் தந்த இந்த வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது! நீர் வாக்குக் கொடுத்தபடியே எனக்குக் காரியத்தை வாய்க்கப் பண்ணப் போகிறீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்!

எனக்கு, **காரிய சித்தியோ கர்த்தரால் வரும்!**

அற்புதங்களை எதிர்பார்க்கிறேன் இயேசுவே... ஆமென்!

கர்த்தர், தான் வாக்குக் கொடுத்தபடியே காரியங்களை சித்திக்கப் பண்ண ஆயத்தமாக இருக்கிறார்.

நாம் இந்த ஆசீர்வாதத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?

எளிமையான 3 காரியங்களை, சில தேவ மனிதர்களுடைய வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.



## யோசேப்பு!

### கர்த்தர் கூட இருந்தார், காரிய சித்தியுள்ளவனானான்!

**"கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்..."** ஆதி. 39:2.

**யோசேப்பு**, 17 வயது இளம் வாலிபனாக இருந்தபோதே, கர்த்தரோடு இசைந்து வாழ்கிற அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். அவருடைய சொந்த சகோதரர்களே அவர் மீது பொறாமை கொண்டு, அன்னிய தேசத்தாரிடத்தில் அவரை விற்றுப் போட்ட போதிலும், கர்த்தரை விட்டு அவர் விலகவில்லை.

தன்னை விலை கொடுத்து வாங்கிய எஜமானுடைய வீட்டில் யோசேப்பு ஒரு அடிமையாக இருந்த போதிலும், தன்னை சிருஷ்டித்த கர்த்தரை அவர் மறக்கவில்லை.

"ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து, ஒரு செல்லப் பிள்ளையாக இருந்த எனக்கு ஏன் இப்படி நடக்க வேண்டும்?" என்று சொல்லி, யோசேப்பு கர்த்தரை முறுமுறுக்கவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் கர்த்தர் என்னோடே கூட இருக்கிறார்!" என்கிற மன மகிழ்ச்சியோடு, தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அடிமை வேலையைக் கூட மிகவும் சந்தோஷமாகச் செய்து வந்தார். அவர் செய்ததை எல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்து, வாய்க்கப் பண்ணினார்.

காரணம், **காரியத்தை வாய்க்கப் பண்ணும் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார்.**

எனக்கு அன்பானவர்களே, கர்த்தர் உங்களோடு கூட இருக்கிறாரா? உங்களுக்குள் அவர் வாசம் பண்ணுகிறாரா?

"யோசேப்போடு கூட இருந்த கர்த்தர், இன்றைக்கு என்னோடு கூட, எனக்குள்ளே இருக்கிறார்!" என்று உங்களால் சொல்ல முடியுமா?

"இயேசு கிறிஸ்து என்னை நேசிக்கிறார்! நானும் அவரை நேசிக்கிறேன்!" என்று நீங்கள் சொல்லலாம்!

இயேசு கிறிஸ்து எல்லோரையும் நேசிக்கிறார்! அவர் பாவிகளின் சினேகிதர்! **(மத்தேயு 9:11).**

பாவத்தில் வாழ்கிற மக்களையும் அவர் நேசிக்கிறார்! ஆனால், பாவிகளோடு கூட அவர் வசிக்க முடியாது.

"இயேசு கிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன். ஆகவே, அவர் என்னோடு இருக்கிறார்!" என்று நீங்கள் சொல்லலாம்! பிசாசுகளும் அவரை விசுவாசித்து நடுங்குகின்றன. **(யாக்கோபு 2:19).** அதனால் பிசாசோடு கூட அவர் இருக்க முடியாது.



இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட அனுபவம் இருக்க வேண்டும். **(யோவான் 1:12).**

நான் ஒரு 'இந்து'க் குடும்பத்தில் பிறந்தவன். என் இளம் வயதில், இயேசு கிறிஸ்து என் மரணப் படுக்கையை மாற்றி, எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். அதனால் அவர் மீது எனக்கு அளவில்லாத அன்பு உண்டானது. அவர் மீது எனக்கு விசுவாசம் இருந்தது.

ஆலய ஆராதனைக்கு தவறாமல் சென்றேன்! காணிக்கை கொடுத்தேன்! நெடு முழங்காலில் நின்று ஜெபித்தேன்! பரிசுத்த வேதாகமத்தை வாங்கி தினமும் வாசித்தேன்! இயேசு கிறிஸ்துவின் மீது ஒரு பக்தி எனக்கு இருந்தது. 3 வருடங்கள், பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனாக இருந்தேன்.

ஒருநாள், ஒரு கிறிஸ்தவக் கூட்டத்தில் கர்த்தர் என்னைச் சந்தித்தார். "நான் உனக்குள் வந்து, உன்னோடு வாசம் பண்ண வேண்டும். அதற்கு, நீ உன் பாவங்களை எல்லாம் விட்டு மனந்திரும்பி, என்னை உன் இருதயத்தில் நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்." என்றார். மட்டுமல்ல, என் இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? என்பதையும் அவர் எனக்குக் காண்பித்தார்.

என் இருதயம், வாலிபத்தின் பாவங்களினால் கறைப்பட்டுப் போய் இருந்தது. இச்சைகளினாலும், கோப சுபாவத்தினாலும், வைராக்கியத்தினாலும், பொல்லாத சிந்தனைகளினாலும் என் இருதயம் தீட்டுப்பட்டு இருந்தது! இப்படியாக என் இருதயம் சுத்திகரிக்கப் படாத நிலையில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்குள் வந்து எப்படி தங்கியிருக்க முடியும்? (மாற்கு 7:21-23).

**"இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்."** (1 யோவான் 1:7) என்கிற வேத வசனத்தை விசுவாசித்து, என் பாவங்களுக்காக மனம் கசந்து அழுது ஜெபித்தேன்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம், பாவமற என் இருதயத்தைக் கழுவியதை என்னால் உணர முடிந்தது. அப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்குள் வந்து தங்கினார்.

அன்று (1972) முதல், இன்றுவரை, அவர் என்னோடே கூட இருக்கிறார். அவர் என்னோடு கூட, எனக்குள் இருப்பதை நான் அறிந்திருக்கிறேன். அவர்தான் ஊழியக் காரியங்களை எல்லாம் வாய்க்கச் செய்கிறார்.

ஒரு சமயம், ஒரு பெற்றோர் தங்கள் மகனை அழைத்துக் கொண்டு, என்னிடத்தில் ஜெபிக்க வந்தார்கள். அப்பொழுது அவர்கள், "எங்கள் மகன் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.' என்று எண்ணி, அவனுக்கு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்துக் கொடுத்தோம். சில மாதங்களுக்குள்ளாக எல்லாவற்றையும் இழந்து வந்து நின்றான்.

"வேறு ஒரு நல்ல இடத்தில் வியாபாரத்தை ஆரம்பித்தால் ஆசீர்வாதமாக இருக்கும்!' என்று அவன் சொன்னபடியினால், மிகவும் கஷ்டப்பட்டு பணம் சேகரித்து, அடுத்த ஒரு இடத்தில் அவனுக்கு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்துக் கொடுத்தோம். 'அங்கும் நஷ்டம்!' என்று சொல்லி, எல்லாவற்றையும் இழந்து வந்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேறு ஒரு பட்டணத்தில் வியாபாரத்தை ஆரம்பித்தால் ஜெயித்து விடலாம்! ஆசீர்வாதமாக இருக்கலாம்!' என்று அவன் சொன்னபடியினால், ஆங்காங்கே கடனை வாங்கி, மறுபடியும் அவன் சொன்ன இடத்தில் தொழிலை ஆரம்பித்துக் கொடுத்தோம்.

சில மாதங்களுக்குள்ளாகவே அதையும் இழந்து வந்து நிற்கிறான். இவனுக்காகச் செய்கிற ஒன்றுமே வாய்ப்பதில்லை! 'அடுத்து என்ன செய்வது?' என்று தெரியவில்லை. எதாவது ஒரு வியாபாரம் வாய்த்தால்தானே இவனுக்கு ஒரு திருமணத்தைச் செய்து வைக்க முடியும்!" என்று மிகுந்த வேதனையோடு சொன்னார்கள்.

"3 இடங்களில் மாற்றி மாற்றி தொழிலை ஆரம்பித்துக் கொடுத்தும், ஒன்றும் வாய்க்கவில்லை!" என்று சொல்லி, மிகவும் கலங்கினார்கள்.

நான் அந்த வாலிப மகனோடு பேசினேன். "வாலிபனாக இருந்த யோசேப்போடு கர்த்தர் இருந்தபடியினால், அவர் செய்த காரியங்கள் எல்லாம் வாய்த்தது. அதன் நிமித்தமாக, வாழ்க்கையில் அவர் ஜெயித்து, ஒரு பெரிய தேசத்திற்கே ஆசீர்வாதமாக மாறினார்!

அதேபோல், உன்னோடு கூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருந்தால்தான், நீ செய்கிற காரியங்கள் எல்லாம் வாய்க்கும்.

நீ இடங்களை மாற்றி மாற்றி தொழிலை ஆரம்பிக்கிறபடியினால் மட்டும், ஆசீர்வாதம் வந்து விடாது. **இயேசு கிறிஸ்துவுக்கு உன் வாழ்க்கையில் முதலிடம் கொடுக்க வேண்டும்."** என்று சொன்னபோது, உடனே அவன் இயேசு கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணித்தான். நானும் அவனுக்காக ஜெபித்து அனுப்பினேன்.

புதிய ஒரு இடத்தில் தொழில் ஆரம்பிக்க கர்த்தர் அவனுக்கு உதவி செய்தார். கர்த்தர் அவனோடு கூட இருந்தபடியினால், தொழிலை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணினார்! அவனுடைய காரியம் வாய்த்தது!

யோசேப்போடே கர்த்தர் இருந்தபடியினால், அவர் எதை எல்லாம் செய்தாரோ, அதை எல்லாம் கர்த்தர் அவருக்கு வாய்க்கப் பண்ணினார். **(ஆதி. 39:23).**

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களைக் குறித்து என்ன?

கர்த்தர் உங்களோடு கூட இருக்கிறாரா? இயேசு கிறிஸ்துவை உங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களுக்கு காரியங்களை சித்திக்கப் பண்ணுவார்.



## உசியா!

### கர்த்தரைத் தேடினான், தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்!

"(உசியா ராஜா) தேவனைத் தேட **மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்."** 2 நாளா. 26:5.

**"தேவன் அவனுக்குத் துணைநின்றார்,...அவன் மிகவும் பெலங்கொண்டான்."** 2 நாளா. 26:7,8.

**கர்த்தரைத் தேடினால், காரியங்கள் வாய்க்கும்!** காரணம், அவர்தான் காரியங்களை வாய்க்கச் செய்கிற தேவன்! கர்த்தரை தேடிப் பாருங்கள், அவர் காரியங்களை கைகூடி வரப் பண்ணுவார்!

இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. அனுதினமும் அவரைத் தேட வேண்டும்.

ஊழியத்தின் நிமித்தமாக, சமீபத்தில் குறிப்பிட்ட ஒரு வெளி நாட்டிற்கு நான் சென்றிருந்தபோது, ஒருநாள், கூட்டம் முடிந்த சமயத்தில் ஒரு வாலிபன் வந்து என்னை சந்தித்தான். அப்பொழுது அவன் என்னைப் பார்த்து, "நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பார்த்திருக்கிறீர்களா? அவர் உங்களோடு பேசி இருக்கிறாரா?" என்று கேட்டான்.

நான் அவனைப் பார்த்து, "நான் பாடுள்ள ஒரு சாதாரண மனிதன்! என்னால் அவரைப் பார்க்க முடியாது. ஆனால் அவர் தன்னை எனக்கு வெளிப்படுத்தினார். அப்பொழுது அவர் என்னோடு பேசினார்." என்றேன்.

உடனே அவன், "நானும் இயேசு கிறிஸ்துவோடு பேச வேண்டும். அவர் என்னோடும் பேசுவாரா?" என்று கேட்டான்.

**"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;" எரேமியா 29:13,14.



## எப்படி? எங்கே? ஜெபத்தில்...!

ஜெபத்தில் கர்த்தரைத் தேடுவது! கர்த்தருடைய முகத்தைத் தேடுவது!

'ஜெபம்!' என்றால், கர்த்தரிடத்தில் "அதைத் தாரும்...இதைத் தாரும் என்று கேட்பதுதான்." என்று தவறாகப் புரிந்து வைத்திருக்கிறோம். 'ஜெபம்' என்பது, நாம் கர்த்தரோடு பேசுவது! அவர் நம்மோடு பேசுவது! அதற்கு அவருடைய முகத்தை நாம் தேட வேண்டும்!

**"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்,...தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்." 2 நாளா. 7:14.**

கர்த்தருடைய முகத்தை ஜெபத்தில் தேடி, அவரை தரிசித்து, அவர் சொல்கிறபடி செய்தால், நம் காரியமெல்லாம் வாய்க்கும்!



ஒருமுறை, வியாபாரம் செய்கிற ஒரு சகோதரர் என்னைச் சந்தித்தார். அவருடைய தகப்பனாரும் வியாபாரம் செய்கிறவர்தான். ஆனால், இவர் பொறுப்புக்கு வந்த பிறகு, இவருடைய தொழில் பெருகி விட்டது!

இவருடைய தொழிலைப் பற்றிய காரியங்களை விசாரித்தபோது, பல தொழில்களாகப் பெருகி இருப்பதாகச் சொன்னார்.

இவர் செய்கிற காரியங்கள் எல்லாம் சித்தி பெற்றது! இவருடைய தகப்பனாருடைய காலத்தில், தொழிலில் பல போராட்டங்கள்! கஷ்டங்கள்! ஆனால் இவருடைய காலத்தில் தொழிலில் ஆசீர்வாதம்! பெருக்கம்!

"இதனுடைய இரகசியம் என்ன?" என்று, நான் அவரிடத்தில் கேட்டேன்.

அப்பொழுது அவர் தன் அனுபவத்தை இப்படியாகச் சொன்னார்:

"நான் தினமும் அதிகாலையில் எழுந்து, ஜெபத்தில் கர்த்தரைத் தேடுவேன்! 'சும்மா பெயருக்காக ஒரு வேத வாசிப்பு! ஒரு ஜெபம்!' என்று செய்யாமல், தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபிப்பேன். காரணம், என் தொழிலை நான் திறம்படச் செய்வதற்கு கர்த்தருடைய ஞானமும், வழி நடத்துதலும் எனக்குத் தேவை! தொழில் காரியமாக என்ன தீர்மானம் எடுத்தாலும், கர்த்தரிடத்தில் கேட்டு, அவர் சொல்கிறபடிதான் செய்வேன்!" என்றார்.

அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. காரணம், இன்றைக்கு சில தேவனுடைய ஊழியக்காரர்கள் கூட கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்காமல், தங்கள் இஷ்டப்படி எல்லாம் ஊழியம் செய்யும்போது, இவர் ஒரு சாதாரண வியாபாரி, 'கர்த்தரிடத்தில் கேட்டு, அதன்படிதான் செய்வேன்.' என்கிறாரே!" என்று எண்ணி மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

நான் மீண்டும் அவரிடத்தில், "எப்படி நீங்கள் கர்த்தரிடத்தில் ஆலோசனை பெறுவீர்கள்? அவர் எப்படி உங்களோடு பேசுவார்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "வியாபாரத்தில் ஒரு இடம் வாங்க வேண்டுமானாலும், ஒரு புதுத் தொழில் ஆரம்பிக்க வேண்டுனாலும், அதற்காக உபவாசித்து தேவ சமூகத்தில் காத்திருந்து, ஆவியில் நிரம்பி ஜெபம் பண்ணுவேன். ஆவியானவர் என்னை ஆட்கொண்டு, அவர் மூலமாக கர்த்தர் என்னோடு பேசுவார்.

'இதைச் செய்! இதை வாங்கு! இதை வாங்காதே!' என்று ஆவியானவர் என்னோடு மிகத் தெளிவாகப் பேசுவார். அதன்படிதான் நான் காரியங்களைச் செய்வேன்!" என்றார்.

எனக்கு அன்பானவர்களே, எவ்வளவு அற்புதமான அனுபவம் பாருங்கள்!

இப்படியாக அவர் கர்த்தரைத் தேடி, அவருடைய ஆலோசனைகளைப் பெற்று நடக்கிறபடியினால்தான், அவருடைய காரியங்கள் எல்லாம் வாய்க்கிறது.

நீங்களும் அவரைப் போல கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள். உங்களோடும் கர்த்தர் பேசுவார்.

**தினமும் அதிகாலையில் எழுந்து, தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபியுங்கள்!**

**பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!**

**ஆவியில் நிரம்பி ஜெபியுங்கள்! கர்த்தர் உங்களை அழகாக நடத்துவார்! நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்!**

இந்த அவசர உலகத்தில், இன்றைக்கு 'அவசரமான ஒரு வேத வாசிப்பு', 'அவசரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறிய ஜெபம்' என்று சொல்லி ஓடிக் கொண்டிருக்கிறோம்.

கொஞ்சம் நில்லுங்கள்! **கர்த்தருக்கு நேரம் கொடுங்கள்.** 24 மணி நேரத்தில், முதல் **ஒரு மணி நேரத்தையாவது கர்த்தருக்குக் கொடுங்கள்.**

அப்பொழுது, நீங்கள் எவ்வளவு பிரயாசப்பட்டும் முடியாத காரியங்களை எல்லாம், கர்த்தர் உங்களுக்கு வாய்க்கச் செய்வார்.

## பரிசுத்த வேதாகமத்தில்...



**"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே."** யோவான் 5:39.

வேத வசனங்களினால்தான் கர்த்தரை நாம் அறிய முடியும்!

"கர்த்தர் எப்படிப்பட்டவர்? அவருடைய அன்பு, வல்லமை, அற்புதங்கள் எப்படிப்பட்டது?" என்று நாம் கர்த்தரை அறிந்து கொள்ள, வேத வசனங்களை வாசித்து, தியானிக்க வேண்டும்!

வேதாகமத்தில் **கர்த்தரைத் தேடுங்கள்!** அவரை அறிந்து கொள்ளும்போது, **காரியங்கள் வாய்க்கும்!**

**"...பெரோயா...பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்."** அப். 17:10,11.



வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, வேதாகமத்தின் தேவனை நாம் அறிந்து கொள்வோம். **கர்த்தரை அறிய அறிய, நமக்கு காரியங்கள் வாய்க்கும்.**

**"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்."** சங்கீதம் 1:2,3.

நீங்கள் செய்கிற காரியங்கள் வாய்க்க வேண்டுமா? உங்கள் முயற்சிகள் வாய்க்க வேண்டுமா? கர்த்தருடைய வேதத்தில் எப்பொழுதும் தியானமாக இருங்கள்!

ஒரு சமயம், ஒரு வாலிபன் என்னைப் பார்க்க வந்தான். அவனுடைய கையில் பரிசுத்த வேதாகமம் இருந்தது. அவன் என்னிடத்தில், "ஐயா, எங்கள் குடும்பம் ஒரு ஏழைக் குடும்பம். என் தகப்பனார், சேர்த்து வைத்திருந்த கொஞ்சப் பணத்தை என்னிடத்தில் கொடுத்து, 'இதை வைத்து வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்.' என்று சொல்லி இருக்கிறார். தொழில் செய்வதற்காக, எங்கள் கிராமத்தில் இருந்து பட்டணத்திற்குப் போகிறேன். அதற்காக உங்களிடத்தில் ஜெபித்து விட்டுப் போக வந்தேன்." என்று சொன்னான்.

அப்பொழுது நான், ஜெபத்தின் மீது அவன் வைத்திருந்த அவனுடைய விசுவாசத்தைக் கண்டேன். அவனுக்காக நான் ஜெபித்து முடித்தபோது, "தம்பி, உனக்கு நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன். அதன்படி செய்வாயா?" என்று கேட்டேன். "சரி ஐயா." என்றான்.

"உன்னுடைய பரிசுத்த வேதாகமத்தை உன்னோடு கூட எடுத்துக் கொண்டு போ. தினமும் அதிகாலையில் எழும்பி வேத வசனங்களை வாசித்து, அதைத் தியானித்து கர்த்தரைத் தேடு. வேத வசனங்களை வாசித்து, ஜெபிக்காமல், நீ வியாபாரத்திற்குப் போகக் கூடாது!" என்று நான் அவனிடத்தில் சொன்னபோது, மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த ஆலோசனையை அவன் ஏற்றுக் கொண்டான்.

சில மாதங்கள் கழிந்தது! அவன் தொழில் செய்யப் போன அந்தப் பட்டணத்திற்கு ஊழியத்தை நிறைவேற்றும்படியாக நான் சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்து நடத்திய அங்கிருந்த தேவ பிள்ளைகளோடு கூட அவனும் இருந்தான்.

அவன் என்னைப் பார்த்ததும், ஓடி வந்து, "ஐயா, நான்தான் அந்த வாலிபன். நீங்கள் சொன்னபடியே கர்த்தருடைய வேத வசனத்தை வாசித்து, தியானித்து ஜெபிக்காதபடி, நான் வெளியில் எங்கும் புறப்பட்டுப் போவதில்லை. இன்றைக்கு இந்தக் குறுகிய காலத்திற்குள் கர்த்தர் என் தொழிலை ஆசீர்வதித்து பெருகப் பண்ணினார். நானும் ஒரு தொழிலதிபராக இருக்கிறேன்!" என்று மகிழ்ச்சியோடு சொன்னான்.

நீங்களும் **தினந்தோறும் அதிகாலையில் எழுந்து கர்த்தரைத் தேடுங்கள்.**

உங்கள் ஜெபத்தினாலும், வேத வசனத்தை தியானிப்பதினாலும் **கர்த்தரைத் தேடுங்கள். உங்கள் கரியங்கள் எல்லாம் வாய்க்கும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எசேக்கியா!

## தேவனுடைய ஊழியத்தில் முழு இருதயத்தோடும் செய்து சித்தி பெற்றான்!

**"அவன் (எசேக்கியா), தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான்." 2 நாளா. 31:21.**

கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுகிறவர்கள், கர்த்தர் விரும்புகிற காரியங்களைச் செய்கிறவர்கள், கர்த்தருடைய மன விருப்பத்தைச் செய்து முடிக்கிறவர்கள் எதைச் செய்தாலும், கர்த்தர் அவைகளை எல்லாம் சித்திக்கச் செய்வார்! அவர்களுடைய காரியங்களை எல்லாம் கைகூடி வரப் பண்ணுவார்!

எனக்கு அன்பானவர்களே, **உங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்த இயேசு கிறிஸ்துவுக்காக, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?** அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்த போதிலும், இன்னும் தன் சரீரத்தில் காயங்களை வைத்திருக்கிற நேசர் **இயேசு கிறிஸ்துவுக்காக என்ன செய்கிறீர்கள்?**

**"பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்." (லூக்கா 12:49)** என்பதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் இருதயத்தில் இருக்கிற விருப்பத்தை வெளிப்படுத்தி இருக்கிறாரே! **அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?**

"எழுப்புதல் அக்கினியைப் போட வேண்டும்! அது பற்றிப் பரவ வேண்டும்!" என்கிற **இயேசு கிறிஸ்துவின் விருப்பத்தை நிறைவேற்ற, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் (இயேசு கிறிஸ்து) சித்தமுள்ளவராயிருக்கிறாரே." 1 தீமோ. 2:4.**

இயேசு கிறிஸ்துவினுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்ற **நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**

**"...சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." (மாற்கு 16:15)** என்று, இயேசு கிறிஸ்து சொன்னாரே! இதை நிறைவேற்ற **நீங்கள் என்ன செய்கிறீர்கள்!**

கர்த்தர் விரும்புகிற ஊழியத்தை நீங்கள் செய்ய வேண்டும்! அல்லது ஊழியம் செய்கிறவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும்! அப்பொழுது, கர்த்தர் உங்களுடைய காரியங்களை எல்லாம் வாய்க்கச் செய்வார்.

எனக்கு ஒரு வாலிப சகோதரனைத் தெரியும். அவன் எப்பொழுதும் துக்க முகத்தோடுதான் இருப்பான். ஒரு முறை நான் அவனைப் பார்த்து, "நீ ஏன் எப்பொழுதும் துக்கத்தோடே இருக்கிறாய்? உன் காரியங்களை என்னிடத்தில் சொல். என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்கிறேன்." என்றேன்.

உடனே கண்ணீர் விட்டு அழுதான். "என்னிடத்தில் யாரும் இப்படி அன்பாக விசாரித்ததே இல்லை. எனக்கு நிரத்தரமான ஒரு வேலையும் இல்லை! நிரத்தரமாகத் தங்க ஒரு இடமும் இல்லை. எனக்கு வயதாகிக் கொண்டே போகிறது. ஆனால் எனக்கென்று ஒரு குடும்ப வாழ்க்கை இன்னும் அமையவில்லை.

என் உறவினர்களில் சிலர் நல்ல உயர்ந்த பதவியில் இருக்கிறார்கள். ஆனாலும் எனக்கு உதவி செய்ய அவர்களுக்கு மனமில்லை. நான் ஒரு ஆசீர்வாதமும் இல்லாமல், ஒரு அனாதையைப்போல் அலைந்து கொண்டிருக்கிறேன்." என்று மிகுந்த வேதனையோடு சொன்னான்!

அப்பொழுது, "உன்னை நேசிக்க, உனக்கு உதவி செய்ய, உனக்காக யாவையும் செய்து முடிக்க இயேசு கிறிஸ்து இருக்கிறார்." என்று, அவரைப் பற்றி நான் அவனிடத்தில் சொன்னபோது, அந்த வாலிபன் இயேசு கிறிஸ்துவுக்கு தன் வாழ்க்கையில் இடம் கொடுத்தான்.

சில நாட்கள் கழித்து, மீண்டும் அவன் என்னைப் பார்க்க வந்தான். அவனுடைய துக்க முகம் மாறி, மிகுந்த மகிழ்ச்சியோடு வந்தான். அப்பொழுது அவன் என்னிடத்தில், "இயேசு கிறிஸ்து எனக்கு நிரந்தரமான ஒரு வேலையை வாய்க்கப் பண்ணி விட்டார்." என்று மிகுந்த சந்தோஷமாகச் சொன்னான். அடுத்து சில நாட்கள் கழித்து வந்து, "என்னை மட்டும் பெரிய ஒரு பட்டணத்திற்கு பயிற்சிக்காக (Training) அனுப்புகிறார்கள்."என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் சில நாட்கள் கழித்து வந்து, "Training முடித்த எனக்கு பதவி உயர்வு தந்து விட்டார்கள். இப்பொழுது நான் கண்காணியாகி விட்டேன்." என்றான்.

சில நாட்கள் கழித்து மறுபடியும் வந்தான். "எனக்கு திருமணம் ஒழுங்காகி விட்டது." என்று சொல்லி, திருமண அழைப்பிதழை என்னிடத்தில் கொடுத்து விட்டுப் போனான்.

சில நாட்கள் கழித்து மீண்டும் வந்து, "சொந்தமாக தொழில் ஆரம்பித்து விட்டேன், ஆசீர்வாதமாக இருக்கிறது." என்று சொன்னான்.

"ஒரு அனாதையைப்போல் இருக்கிறேன்!" என்று சொன்னவனுக்கு, சில நாட்களுக்குள்ளாக இத்தனை ஆசீர்வாதங்கள் எப்படி வந்தது?" என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது.



நான் அவனிடத்தில், "எப்படி நீ செய்வதெல்லாம் வாய்க்கிறது?" என்று விசாரித்தேன்.

அதற்கு அவன், "இயேசு கிறிஸ்துவை நான் ஏற்றுக் கொண்ட பிறகு, ஒரு அனாதைபோல் இருந்த என் வாழ்க்கையில் எனக்கு நல்லதொரு தகப்பனாக அவர் வந்தார். என் பாவங்களை எல்லாம் மன்னித்து, என்னுடைய உள்ளத்தில் ஒரு மெய்யான சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தந்தார்.

எனவே, 'எனக்கு வாழ்வு கொடுத்த இயேசு கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்ய வேண்டும்!' என்று தீர்மானித்தேன். வேலை செய்கிற நேரம் போக, மற்ற நேரமெல்லாம் அவருக்கு ஊழியம் செய்தேன். வேலை முடிந்து வந்ததும், கைப் பிரதிகளை எடுத்துக் கொண்டு தெருக்களிலே போய் நின்று ஜனங்களுக்குக் கொடுப்பேன். யாராவது விசாரித்தால், இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்களுக்குச் சொல்வேன்!

ஞாயிறு ஆலய ஆராதனைக்கு காலையில் தவறாமல் செல்வேன். மாலையில் சில தேவ பிள்ளைகளோடு சேர்ந்து சுவிசேஷத்தை அறிவிக்கச் செல்வேன். என் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிப்பது எனக்கு அதிக சந்தோஷம்!" என்று சொன்னான்.

எனக்கு அன்பானவர்களே, இதுதான் ஆசீர்வாதத்தின் இரகசியம்! அவனுடைய காரியமெல்லாம் ஜெயமானதின் இரகசியம் இதுதான்! நீங்களும் உங்கள் வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டுமா? உங்களுடைய காரியங்கள் உங்களுக்குக் கைகூடி வர வேண்டுமா? **கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்!** (ரோமர் 12:11).

**எசேக்கியா** ராஜா, கர்த்தருடைய ஊழியக் காரியங்களைச் செய்தபடியினால், அவர் செய்ததை எல்லாம் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்.

**"...எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி, அதின் தண்ணீரை,...தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்பினான்; எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது."** 11 நாளா. 32:30.

**கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்!** கர்த்தர் வாய்க்கப் பண்ணுவார்!

சமீபத்தில் நாம் நடத்திய ஒரு சிறுவர் ஜெப முகாமிற்கு வந்திருந்த ஒரு சின்னத் தம்பி, "நான் என்னோடு படிக்கிற என் நண்பனை இயேசு கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி விட்டேன்!" என்றான்.

"எப்படி அதைச் செய்தாய்?" என்று நான் அவனிடத்தில் கேட்ட போது, "நான் இயேசு கிறிஸ்துவை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டபடியினால் Happyயாக இருக்கிறேன். நீயும் அவரை ஏற்றுக் கொள். நீயும் Happyயாக இருக்கலாம்!' என்றேன். அவனும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான்." என்று சொன்னான்.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களைக் குறித்து என்ன? **இயேசு கிறிஸ்துவினிடத்தில் இத்தனை ஆசீர்வாதங்களைப் பெற்ற நீங்கள், அவருக்காக என்ன செய்கிறீர்கள்?**

**உங்களுக்காக சிலுவை சுமந்து மரித்த இயேசு கிறிஸ்துவுக்காக, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?** அவருக்காக இதுவரை ஒன்றுமே செய்யாத உங்களை, அவர் ஏன் ஆசீர்வதிக்க வேண்டும்?

**இந்தப் புது வருடத்திலாவது, இயேசு கிறிஸ்துவை அறிவிக்கத் தீர்மானியுங்கள்!**

"வேலை செய்கிறேன்!' அல்லது 'தொழில் செய்கிறேன்!' அல்லது 'படிக்கிறேன்!' நான் என்ன செய்ய முடியும்?" என்கிறீர்களா?

## ஜெபிக்கலாம்!

எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். **(1 தீமோ. 2:1-3)**. தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, உங்களுக்குத் தெரிந்த, உங்களுக்குப் பழக்கமானவர்கள் இரட்சிக்கப்பட குறிப்பாக **ஜெபியுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லலாம்!

நேரடியாக இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பேச உங்களுக்குப் பயமாக இருந்தால், கைப் பிரதிகளைக் கொடுக்கலாம்! அல்லது சுவிசேஷப் பிரதிகளைக் கொடுக்கலாம்! பிரசங்கம் தேவையில்லை. **இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

## கொடுக்கலாம்!

மிஷனெரிகளைத் **தாங்குங்கள்.** உங்கள் சார்பாக மிஷனெரிகள் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். ஒரு மிஷனெரியைப் பொறுப்பெடுத்து, உங்கள் **காணிக்கையினால் தாங்கலாம்! (மாதம் ₹ 3,000/-).** மிஷனெரிப் பணித் தளங்களில் உள்ள கிராமங்களில் **ஆலயம் கட்டிக் கொடுக்கலாம்! (சுமார் ₹ 2 லட்சம்).**

## உதவியாக இருக்கலாம்!

சுவிசேஷத்தை அறிவிக்கிற ஊழியங்களோடு இணைந்து செயல்படலாம்! உங்கள் திருச்சபையில், உங்கள் ஊரில், உங்கள் பட்டணத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கிற குழுவினர் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து ஊழியத்தில் உதவி செய்யலாம்!

இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யுங்கள். அவர் உங்கள் காரியங்களை கைகூடி வரப் பண்ணுவார்!

---

இந்தப் புது வருடத்தின் ஆசீர்வாதத்திற்காக விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.



ஆண்டவரே, இந்தப் புதிய ஆண்டிற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

இந்த ஆண்டிற்கு நீர் எனக்குத் தந்திருக்கும் வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

"காரிய சித்தியோ கர்த்தரால் வரும்.'(நீதி. 16:33) என்கிற இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது!" என்று நான் விசுவாசிக்கிறேன்!

இந்த ஆண்டில் என் காரியங்களை எல்லாம் வாய்க்கச் செய்வீர் என்று நான் விசுவாசிக்கிறேன்! யோசேப்போடே இருந்து காரியங்களை வாய்க்கச் செய்த தேவன், என்னோடும் கூட இருப்பீராக! இரவும், பகலும் எப்பொழுதும் நீர் என்னோடு கூட இருந்து என்னை நடத்துவீராக! நான் உம்மோடு கூட இருக்க, உமக்குப் பிரியமானதைச் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்! நான் தினமும் தவறாமல் ஜெபிக்கவும், உம்முடைய வசனத்தை தியானிக்கவும் எனக்குக் கிருபை தாரும்!

எனக்காக இரத்தம் சிந்தி என்னை மீட்டுக் கொண்ட உம்மை, மற்றவர்களுக்குச் சொல்ல எனக்கு உதவி செய்யும்! என்னால் முடிந்த ஊழியத்தை உமக்குச் செய்ய என்னை ஒப்புக் கொடுக்கிறேன்!

எப்படியாவது சிலரையாகிலும் இந்த ஆண்டில் இரட்சிப்பிற்குள் வழி நடத்த எனக்குக் கிருபை தாரும்!

இந்த ஆண்டில் ஒவ்வொரு நாளும் உமக்குப் பிரியமானதையே செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்!

நீர் என் காரியங்களை கைகூடி வரப் பண்ணுவீராக!

என் படிப்பின் காரியத்தில்...வேலை காரியத்தில்...தொழில் காரியத்தில்...பிள்ளைகள் காரியத்தில்...குடும்பக் காரியத்தில்...ஊழியக் காரியத்தில்...வீடு கட்டுகிற காரியத்தில்... நான் முயற்சி செய்கிற காரியத்தில், எனக்கு காரியங்களைக் கைகூடி வரப் பண்ணுவீராக!

இயேசுவின் நாமத்தில் எனக்கு இந்தக் காரியம் வாய்ப்பதாக! தடைகள் விலகுவதாக! ஜெயம் உண்டாவதாக!

வாக்குத்தத்தங்களின் தேவனே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்! நீர் வாக்கு மாறாதவர்! கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிறவர்! விசுவாசத்தோடு நான் அற்புதங்களை எதிர்பார்க்கிறேன்! இயேசுவின் நாமத்தில் காரியங்களை வாய்க்கச் செய்யும் தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!

ஆமென்! ஆமென்!


நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் அளித்த,

**2019ம் வருடத்திற்கான புத்தாண்டு**

**வாக்குத்தத்தச் செய்தி!**



DVDயில்!

நேரில் பெற 100/- ரூபா

தபாலில் பெற 150/- ரூபா

எமது தலைமை மற்றும் எல்லாக் கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!

Online Purchase: www.jesusredeemsonline.com www.jesusredeems.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018ம் வருடத்தில், 'இயேசு விடுவிக்கிறார்'

# ஊழியங்களில் சகலத்தையும் புதிதாக்கிய சர்வ வல்ல இயேசு!



கடந்த 2018ம் வருடத்தில்,
**"இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்."**
(வெளி. 21:5) என்று, கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.
தான் வாக்குக் கொடுத்தபடியே,
'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களில் புதிய பெரிய காரியங்களைச் செய்து, கர்த்தர் மகிமைப்பட்டார்.

கர்த்தர் இந்த ஊழியத்தில் செய்த மகிமையான புதிய காரியங்களைப் பற்றி, இந்த ஊழியத்தை நேசிக்கிற, ஜெபிக்கிற, கொடுத்துத் தாங்கி வருகிற உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வாசித்து, நீங்களும் எங்களோடு இணைந்து கர்த்தரைத் துதித்து, மகிமைப்படுத்துங்கள்!

## விடுதலைப் பெருவிழா!

கன்னியாகுமரி மாவட்டம்-**கருங்கல், தடிக்காரன்கோணம், மயிலாடி** ஆகிய இடங்களில் **ஆசீர்வாதப் பெருவிழாக்கள்** நடைபெற்றன. கர்நாடக மாநிலம்-**ஹொசக்கோட்டாவில்** (3 நாட்கள்) **சமாதானப் பெருவிழா** நடைபெற்றது. இந்தக் கூட்டங்களின் மூலமாக, ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், அதன் மூலமாக திரள் கூட்ட மக்கள் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும், அற்புதத்தையும் பெற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை பாராட்டினார்.



ஹொசக்கோட்டா - விடுதலைப் பெருவிழா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வாதமான சென்னை!

சென்னைப் பட்டணத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க, **சென்னையில் 7 நாட்கள், 7 இடங்களில், எழுப்புதல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. பகலில் பட்டணம் முழுவதும் வாகனங்களில் ஊடுருவிச் சென்று **ஜெப யாத்திரை** நடத்தப்பட்டது. மாலை நேரத்தில் நடத்தப்பட்ட **ஜெப திரளணி**யில், திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபித்தார்கள்.

## பெண்கள் புது வாழ்வு முகாம்!



திருப்பூர் மாவட்டம்-**குடிமங்கலத்தில்** '**பெண்கள் புது வாழ்வு முகாம்**' நடைபெற்றது. தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற **அற்புத விடுதலைப் பிரார்த்தனையில்**, நமது சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** அவர்களை கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தினார்.

இந்த முகாம்கள் மூலமாக, ஆயிரக்கணக்கான சகோதரிமார்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## உள் தேசம் மற்றும் வெளி தேச ஊழியங்கள்!

ஆந்திர மாநிலத்தின் எழுப்புதலுக்காக **குண்டூரிலும்**, தீவுகளின் பாதுகாப்புக்காகவும், எழுப்புதலுக்காகவும் **அந்தமானிலும்**, மஹாராஷ்டிரா மாநிலத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பாதுகாப்புக்காகவும் **நாக்பூரிலும்**, கர்நாடகா மாநிலத்தின் எழுப்புதலுக்காக **பெங்களூருவிலும், 12 மணி நேர ஜெபமும், மும்பை** பட்டணத்தில் **9 மணி நேர ஜெபமும்** நடைபெற்றது.

இந்த ஜெபங்களில் திரளான தேவ பிள்ளைகள் கலந்து கொண்டு, தேசத்திற்காக திறப்பிலே நின்றார்கள்.

மட்டுமல்ல, **ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மியான்மர், அபுதாபி, மஸ்கட்** ஆகிய வெளி தேசங்களில், **10** மற்றும் **12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபங்கள், விடுதலைப் பெருவிழாக்கள், அற்புதத்தின் இரவுக் கூட்டங்கள், சுகமளிக்கும் ஆராதனைகள், நம்பிக்கைப் பெருவிழா, அற்புதத்தின் அபிஷேக இரவுக் கூட்டங்கள்** போன்ற ஊழியங்களை நிறைவேற்றி முடிக்க, கர்த்தர் மாபெரும் கிருபை செய்தார்.

## இலங்கை தேச ஊழியங்கள்!

**இலங்கை** தேசத்தின் எழுப்புதலுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும், **9 மாகாணங்களில், 9 நாட்கள்**, '**ஜெப யாத்திரை**'யும், '**ஜெபக் கூடுகை**'யும் நடைபெற்றது. 2 வாகனங்களில் சுமார் **40** தேவ பிள்ளைகள் தேசத்தின் எல்லா பகுதிகளுக்குள்ளும் ஊடுருவிச் சென்று, ஜெப யாத்திரை செய்து ஜெபித்தார்கள்.

ஒவ்வொரு நாளும், மாலை நேரத்தில் குறிப்பிட்ட பட்டணங்களில் நடைபெற்ற, '**ஜெபத் திரளணி**'யில் மண்டபங்கள் நிரம்பி வழியும்படியாக, திரளான ஜனங்கள் கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.

## மிஷனெரி ஊழியம்!

**23** மாநிலங்களில், **57** மிஷனெரி ஸ்தாபனங்களோடு இணைந்து, **357 மிஷனெரிகள்** தியாகத்தோடு ஊழியம் செய்ய கர்த்தர் உதவி செய்தார். படிப்பறிவில்லாத **114** 'பீல்' **ஆதிவாசிக் குழந்தைகளை** ஒவ்வொரு மாதமும் **தாங்கவும், 280 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கவும்** கர்த்தர் கிருபை செய்தார்.

அங்குள்ள '**ஷாலோம்**' மிஷனெரி ஊழிய ஸ்தாபனத்தின், 'பீல்' **சுதேச ஊழியர்கள் கூடுகையை** கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். அதில், தங்கள் துணைவியாரோடு கலந்து கொண்ட சுமார் **700 மிஷனெரிகளுக்கு**, ஒரு வண்ண நிறக் '**கம்பளி**'யும், '**ஐக்கிய விருந்து**'ம் வழங்கப்பட்டது.

இக்கூடுகையின் முழுச் செலவையும் (**சுமார் ₹ 14 லட்சம்**) நமது '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியமே பொறுப்பெடுத்துக் கொண்டது. அந்நாளில், புதிதாக **3 ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும், ஒலி பெருக்கிக் கருவிகளை வழங்கவும்**, தேவ ஊழியர்களுக்குப் **பரிசாக புத்தாடைகள்** மற்றும் புதிய விசுவாசிகளுக்கு **வேதாகமங்கள்** வழங்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார்.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் **22,000 கிராமங்களில், 5 ஆண்டுகளில், 500 மிஷனெரிகளைக்** கொண்டு சுவிசேஷத்தை அறிவிக்கும் திட்டத்தில், இதுவரை **250 மிஷனெரிகளை** நாம் தாங்கி வர கர்த்தர் உதவி செய்தார். இந்த மிஷனெரி ஊழியத்தின் மூலமாக, சுமார் **4,36,128** பேர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், சுமார் **22,151** பேர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும், சுமார் **1,621** பேர்கள் ஞானஸ்நானம் எடுக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெத்செமனே ஜெப மையங்கள்!



கெத்செமனே ஜெப மையம் - திண்டுக்கல்

இந்தியா மற்றும் உலக நாடுகளின் எழுப்புதலுக்காக திறப்பிலே நின்று ஜெபிக்கவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் கர்த்தரால் தோற்றுவிக்கப்பட்டதுதான், '**கெத்செமனே ஜெப மையம்!**'. கடந்த 2018ம் ஆண்டு, **தூத்துக்குடி, பள்ளிப்பாளையம், திண்டுக்கல், வள்ளியூர்** மற்றும் **மும்பை-மலாட்** ஆகிய பகுதிகளில், **புதிதாக ஜெப மையம்** தோற்றுவிக்கப்பட்டது. இதுவரை **இந்தியாவில் 63 இடங்களிலும், வெளி தேசங்களில் 11 இடங்களிலுமாக** நமது ஜெப மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த ஜெப மையங்களின் மூலமாக, சுமார் **3,57,048** பேர்கள் **நேரடியாகவும்**, சுமார் **74,823** பேர்கள் **தொலைபேசி மூலமாகவும்** தொடர்பு கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். சுமார் **1,76,366** பேர்கள் இந்த ஜெப மையங்களுக்கு **நேரடியாகச்** சென்று, தேசத்திற்காகவும், அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காகவும் ஜெபித்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு அவரது அன்பைச் சொல்லி, அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்துவதுதான், இந்த ஜெப மையத்தின் பிரதான நோக்கம் ஆகும். அதன்படி, **புதிதாக 680** பேர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

## தேவனுடைய கூடாரம்!

கர்த்தர் தெரிந்தெடுத்த எழுப்புதல் ஸ்தலங்களில் ஒன்று, '**இயேசு விடுவிக்கிறார்**' **- தேவனுடைய கூடாரம்**. கடந்த 2018ம் வருடம் முழுவதும் தினந்தோறும் அனேக மக்கள் இக்கூடாரத்திற்கு வந்து ஜெபித்து, நன்மைகளைப் பெற்றுச் சென்றனர். திரளான சிறு பிள்ளைகளையும், வாலிபர்களையும், பெரியவர்களையும் கர்த்தர் தமக்கென்று பிரித்தெடுத்து, ஜெப **வீரர்களாக உருவாக்கினார்**. திரளான ஜனங்கள் இக்கூடாரத்தில் நடைபெற்ற ஜெபக் கூட்டங்களில் கலந்து கொண்டு, இரட்சிக்கப்பட்டு, விடுதலையோடு திரும்பிச் சென்றனர்.

மேலும், **பாலியர் நண்பன், விஷ்வவாணி, இந்திய மிஷனெரி சங்கம்** போன்ற பிற ஊழிய ஸ்தாபனங்களின் முகாம்களும் இங்கு நடத்தப்பட்டன. இக்கூடாரத்தில் நடைபெற்ற 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின், **'40வது ஆண்டு-ஸ்தோத்திரக் கூட்டம்!'** மற்றும் **'40வது ஆண்டு-சிறுவர் விழா'**வை கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். இக்கூடாரத்தின் எல்லைகளை கர்த்தர் விரிவாக்கிக் கொடுத்து, தான் கொடுத்த வாக்குத்தத்தங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.



## ஜெப மலை ஊழியங்கள்!

இங்கு நடைபெற்ற '**ஜாமக்காரன்**' ஜெபத்தில், சுமார் **8,668** பேர்கள் கலந்து கொண்டார்கள். சுமார் **23,730** பேர்கள் **நேரில் வந்து** ஜெபித்து விட்டுச் சென்றார்கள். சுமார் **4,826** பேர்கள் **தொலைபேசி மூலமாக** ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார்கள். சுமார் **27,034** பேர்கள் **நேரில் வந்து**, தேவ ஆலோசனைகளையும், ஜெப உதவியையும் பெற்றுச் சென்றார்கள்.

**ஜெப நடைத் தோட்டம்** பிரதிஷ்டை செய்யப்பட்ட நாள்முதல், இதுவரை சுமார் **57,050** பேர்கள் **நேரடியாக வந்து**, தேசத்திற்காக மொத்தம் **62,838:05 மணி** நேரம் ஜெபித்திருக்கிறார்கள். **மன்றாட்டு ஜெபக் கோபுரத்திற்கு**, சுமார் **32,936** பேர்கள் **நேரடியாக வந்து**, மொத்தம் **40,582:10 மணி நேரம்** ஜெபித்திருக்கிறார்கள்.
**அற்புத சுகம் ஜெப கோபுரத்திற்கு**, சுமார் **34,370** பேர் **நேரடியாக வந்து** ஜெபித்து, வியாதியிலிருந்து சுகத்தைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். இங்கு நடைபெற்ற அனைத்து ஜெபங்களிலும் **ஒரு கோடி ஆத்துமா திட்டத்திற்காக**, மொத்தம் சுமார் **42,417:30 மணி** நேரம் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது.

வியாழக் கிழமைதோறும் நடைபெற்ற **உபவாச ஜெபத்தில்**, சுமார் **7,392** பேர்களும், கடைசி வியாழக் கிழமைதோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற **திறப்பின் வாசல் ஜெபத்தில்**, சுமார் **55,195**க்கும் அதிகமான ஜனங்களும், முதல் சனிக் கிழமைதோறும் நடைபெற்ற **முழு இரவு ஜெபத்தில்** சுமார் **9,003** பேர்களும் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். மேலும், இங்கு நடைபெற்ற **தன்னார்வ ஊழியர் கூடுகையில்**, சுமார் **579** பேர்கள் கலந்து கொண்டார்கள். நடைபெற்ற **மகளிர் சுய உதவிக் குழு ஜெபக் கூடுகையில்** சுமார் **1,113** பேர்கள் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். சுமார் **1,532** பேர்கள் ஜெப மலையில் தங்கியிருந்து ஜெபித்தார்கள்.

**'சினெர்ஜியா' வாலிபர் கூடுகையில்** சுமார் **831** பேர்கள் கலந்து கொண்டு ஜெபித்தனர். சிறு பிள்ளைகளுக்காக நடைபெற்ற **JR Kids Fellowship கூடுகையில்** சுமார் **2,500** சிறு பிள்ளைகள் கலந்து கொண்டார்கள்.

கடந்த 2018ம் வருடம் முழுவதும் நடைபெற்ற **கிராம ஊழியத்தின் மூலமாக**, சுமார் **2,190** பேர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுமார் **188** பேர்கள் இங்கு வந்து, முதன்முதலாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொண்டு, இரட்சிக்கப்பட்டார்கள்.

## சிறுவர் ஊழியம்!

கடந்த 2018ம் வருடத்தில், **581** இடங்களில் சிறுவர் ஊழியத்தை நிறைவேற்ற கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலம், சுமார் **2,25,454** சிறு பிள்ளைகளுக்கு நேரடிடையாக சுவிசேஷம் சென்றடைந்தது. சுமார் **73,078** சிறு பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழ, தங்களை ஒப்புக் கொடுத்தனர். **10** இடங்களில் **சிறுவர் சிறப்பு முகாம்கள்** நடத்தப்பட்டது.

நாலுமாவடியில் **சிறுவர் வல்லமை முகாம்** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. அதில், சுமார் **1,000**க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் பங்கு பெற்று, வல்லமை-வரங்களைப் பெற்றுக் கொண்டனர். சுமார் **494** தேவ பிள்ளைகளுக்கு **சிறுவர் ஊழியப் பயிற்சி** கொடுக்கப்பட்டது. **200** சிறுவர் ஊழியர்களுக்கு சிறுவர் ஊழியத்திற்கான **உபகரணங்கள்** கொடுக்கப்பட்டது. சிறுவர் ஊழியத்திற்கென்று **புதிதாக ஒரு வாகனம் வாங்க**வும் கர்த்தர் கிருபை செய்தார்.

**நாகர்கோவில், பாளையங்கோட்டை, மானூர், சுரண்டை, ஜெப மலை, தூத்துக்குடி, நாலுமாவடி, காரைக்குடி, திருப்பூர், கோயம்புத்தூர், பெரம்பலூர், ஒசூர், கிருஷ்ணகிரி, வேலூர், ஆதம்பாக்கம், தாம்பரம்** ஆகிய இடங்களில் சிறு பிள்ளைகளுக்கான **மாதாந்திரக் கூடுகை** நடைபெற்று வருகிறது.

**'இயேசுவின் கண்மணிகள்!'** ஜெபத் திட்டத்தில், சுமார் **20,045** பேர்கள் இணைவதற்கு கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். இத்திட்டத்தில் இணைந்திருக்கும் ஒவ்வொரு சிறு பிள்ளைக்காகவும் தினந்தோறும் ஜெபங்களை ஏறெடுக்க கர்த்தர் உதவி செய்தார்.

**'ஜாலி டைம்!'** தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக, **'ஜூடா'** என்கிற, ஒரு பெரிய **பேசும் பொம்மை** வாங்க கர்த்தர் கிருபை செய்தார். **47 'ஜாலி டைம்' தொலைக்காட்சி நிகழ்ச்சி**களைத் தயாரித்து, ஒளிபரப்ப கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலமாக, ஏராளமான சிறு பிள்ளைகள் கர்த்தரை அறிந்து கொள்ளவும், அவருடைய வழிகளில் நடந்து, எழுப்புதலுக்கு ஆயத்தமாகவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## இளம் வாலிபர் ஊழியம்!



**நாலுமாவடியில் 3 நாள் முகாமும், ஜெபமலை, திருவள்ளூர், ஆலங்குளம், நாகர்கோவில், மதுரை, கும்பகோணம், சிங்கப் பெருமாள் கோவில், பெருந்துறை, உடுமலைப்பேட்டை, சாயர்புரம்** (Pope's College), **செபத்தையாபுரம்** ஆகிய இடங்களில் **ஒருநாள் இளம் வாலிபர் முகாம்** நடத்த கர்த்தர் உதவி செய்தார்.

**ஈரோடு, சுரண்டை, பாவூர்சத்திரம், மும்பை, பசுமலை** ஆகிய இடங்களில் Mini Camp நடத்தவும் கர்த்தர் உதவி செய்தார். மேலும், **பாளையங்கோட்டை** (Sarah Tucker), **வள்ளியூர், புதுக்கோட்டை, மதுரை** ஆகிய இடங்களில் Exam Special, Further Career Guidance ஆகிய கூட்டங்கள் நடத்தவும் கர்த்தர் உதவி செய்தார்.

ஆயிரக்கணக்கான மாணவர்களை **ஆத்தும ஆதாயம் செய்ய**வும், கிறிஸ்துவுக்குள் அவர்களை ஸ்திரப்படுத்தி, தங்கள் வாலிபத்தை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளவும், அவர்களுக்கு வழிவகை செய்து கொடுக்கப்பட்டது.

டாக்டர்களைக் கொண்டு, LCD Power Point மூலமாக Practical Talk நடத்தவும், சில B.Ed., மற்றும் Nursing கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் (விருப்பம் உள்ள பிள்ளைகளுக்கு), Mini கூடுகை நடத்தவும் கர்த்தர் உதவி செய்தார். Councelling ஊழியத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார்.

**பெற்றோர்களுக்கான கூடுகை** நடத்தி, பிள்ளைகளின் மன நிலைமையைப் பற்றி விளக்கி, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு 'மாதிரி'யாக வாழ்வது மற்றும் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டிய கடமைகளைப் பற்றிக் கற்றுக் கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிபர் ஊழியம்!

"**2020க்குள் 10 லட்சம் வாலிபர்**"களை ஆதாயம் செய்யும் தரிசனத்தோடு, வாலிபர் ஊழியம் செயல்படுகிறது. இந்தியாவில் 3 மாநிலங்களிலும், தமிழ்நாட்டின் 4 மாவட்டத் தலைநகரங்களிலும், 10 தாலுகாக்களிலும் நடைபெற்ற **'வாலிபர் கொண்டாட்டம்!'** மூலமாக, சுமார் **8,177** வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததில், சுமார் **3,090** வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

தேர்வு எழுதும் மாணவர்களுக்காக, தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் நடைபெற்ற 'Achievers-2018' **சிறப்புக் கூடுகையில்**, சுமார் **17,168** மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இதில், **90% பேர் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்கள்**. தேர்வைக் குறித்த பயத்தோடும், கலக்கத்தோடும் வந்த மாணவர்களுக்கு ஜெயத்தைத் தருகிறவராகிய இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தியதில், சுமார் **8,455** மாணவர்கள் அவரை சார்ந்து கொண்டனர்.



**18 கல்லூரி**கள் மற்றும் **37 பள்ளி**களில் நடைபெற்ற **கூடுகைகளில்**, சுமார் **18,771** மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொடுத்ததோடு, இயேசு கிறிஸ்துவைப் போதித்ததில், சுமார் **5,048** மாணவர்கள் அவர் மேல் விசுவாசம் வைத்தனர். **15 இடங்களில்** வாலிபர்களுக்கென்று நடைபெற்ற **சிறப்பு வாலிபர் கூடுகைகளில்**, சுமார் **2,180** பேருக்கு நற்செய்தி அறிவித்ததில், சுமார் **775** பேர் இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் இடமளித்தனர்.

வாரந்தோறும் ஒளிபரப்பப்படுகிற, **'வாலிபர் உலகம்!' தொலைக்காட்சி நிகழ்ச்சியின்** மூலமாக திரள் கூட்ட வாலிபர்கள் மனந்திரும்பியதோடு, தங்கள் விசுவாச வாழ்க்கையிலும் பெலப்பட்டார்கள். **27 திருச்சபைகளில்** உள்ள சுமார் **2,058** வாலிபர்களை சத்தியத்தில் வழி நடத்தியதில், சுமார் **559** வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக வாழ தங்களை அர்ப்பணித்தனர். **மும்பை** மற்றும் ஆந்திரா-**புத்தூர்** ஆகிய பட்டணங்களில், **155** வாலிபர்களுக்கு **'சேனை' தலைமைத்துவப் பயிற்சி** அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக பல இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், வாலிபர்கள் மூலமாக, சுமார் **1,650** பேருக்கு கைப்பிரதி வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கவும், 3 இடங்களில் திரைப்படங்கள் மூலமாக சுமார் **390** பேருக்கு நற்செய்தி அறிவிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

வாலிபர்களை **கிறிஸ்துவின் சீஷர்களாக** உருவாக்க, **மாதந்தோறும் 34 இடங்களில் 'சினெர்ஜியா' வாலிபர் கூடுகை** நடத்தவும், அதில் சுமார் **1,150** வாலிபர்கள் பங்கேற்று, சத்தியத்தை அறிகிற அறிவில் வளரவும் கர்த்தர் கிருபை செய்தார். இரட்சிக்கப்பட்ட வாலிபர்களுக்காக **மாதந்தோறும் 9 இடங்களில்** நடைபெற்ற **பின்தொடர் கூடுகையின்** மூலமாக, சுமார் **200** வாலிபர்கள் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**பள்ளிகள், கல்லூரிகள்** மற்றும் **விடுதிகளில், மாதந்தோறும்** சுமார் **1,000** மாணவர்கள் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தப்பட்டார்கள். **'வாலிபர் உலகம்!' மாத இதழின்** மூலமாக, **மாதந்தோறும்** சுமார் **50,000**க்கும் அதிகமான வாலிபர்களின் நெஞ்சங்களில் வேதாகமத்தின் விளக்கேற்ற கர்த்தர் உதவி செய்தார். ஜெபிக்கிற **வாலிபர் சேனையை** எழுப்ப, **7 இடங்களில்** நடைபெற்ற, **'மவுண்ட் சீனாய்'** (Mount Sinai) ஒருநாள் **வாலிபர் உபவாசக் கூடுகையில்**, சுமார் **2,193** வாலிபர்கள் பங்கு பெற்று, தாவீதைப் போல கர்த்தருடைய யுத்தத்தை நடத்துபவர்களாக உருவாக்கப்பட்டனர். **'உழைக்கும் கரங்கள்!'** கூடுகையின் மூலமாக, ஒரு மாவட்டம் மற்றும் ஒரு தாலுகாவில் சுவிசேஷம் அறிவித்ததில், சுமார் **21,000** பேர்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொண்டார்கள். இதில், சுமார் **6,380** பேர்கள் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.



சுவிசேஷம் அறிவிக்கிறார்கள்

**இதுவரை கர்த்தர் எழுப்பித் தந்த சுமார் 284 'இயேசுவின் நண்பன்!'** ஜெபக் குழுக்களில் **ஒவ்வொரு வாரமும்**, சுமார் **1,420** வாலிபர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள வாலிபர்களின் மன மாற்றத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபித்து வர கர்த்தர் கிருபை செய்தார்.

**10 லட்சம் வாலிபர்களை ஆதாயம் செய்ய**, கடந்த 2018ம் **வருடத்தில், சுமார் 34,922:00 மணி நேரங்கள்** ஜெபத்தை ஏறெடுக்க கர்த்தர் கிருபை செய்தார். மட்டுமல்ல, வாலிபர் ஊழியத்தின் மூலமாக, சுமார் **72,223 வாலிபர்களுக்கு சுவிசேஷம்** அறிவிக்கவும், சுமார் **24,381** பேர்கள் **இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும்** கர்த்தர் கிருபை பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## New Media ஊழியப் பிரிவு!

கடந்த 2018ம் ஆண்டு, நமது **'இயேசு விடுவிக்கிறார்' தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** அனைத்தும் HD தரத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, நவீன முறையில் Edit செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது. 1996ல் நமது தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டபோது, '30 நிமிடத்திற்கு ஒரு நிகழ்ச்சி!' தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டது. தற்போது **5 மொழிகளில் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி)** சுமார் **3,048 தொலைக்காட்சி நிகழ்ச்சி**கள் தயாரிக்கப்பட்டு, **14 சேனல்**களில் ஒளிபரப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகளின் மூலமாக லட்சக்கணக்கான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

சமூக வலைத் தளங்கள் மூலமாக, சுமார் **40க்கும்** அதிகமான 'இயேசு விடுவிக்கிறார்' கூட்டங்கள் **நேரடி ஒளிபரப்பு (LIVE)** செய்யப்பட்டது. மேலும், **தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்** மற்றும் **இந்தி** ஆகிய மொழிகளுக்கான நிகழ்ச்சிகளும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது. அதே நேரத்தில், சமூக வலைத் தளங்களிலும் நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தக்கதான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2018ம் ஆண்டுவரை, நமது Youtube மூலமாக, சுமார் **3 கோடியே 35 லட்சத்திற்கும்** அதிகமான ஆத்துமாக்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் 2018ம் ஆண்டுவரை, சுமார் **1,80,000க்கும்** அதிகமானோர் Subscribe செய்துள்ளனர். Facebook மூலமாக சுமார் **2.5 கோடிக்கும்** அதிகமான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. 'இயேசு விடுவிக்கிறார்' பக்கத்தை சுமார் **1,22,000க்கும்** அதிகமானோர் தொடர்கின்றனர்.

இந்த (2019) **ஜனவரி 1ம் தேதிமுதல், இணையத் தளம்** வாயிலாக **24 மணி நேரமும்** சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக, **'COMFORTER'** என்கிற IP TV ஆரம்பிக்கப்பட்டது. **'இந்தியாவை நேசிப்போம்!'** என்கிற பாடல் மற்றும் **'ரஞ்சித்'** என்கிற **குறும் படம்** தயாரித்து, DVDயாக வெளியிடப்பட்டது. நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** மற்றும் சகோ. **A. அப்பாத்துரை** அவர்கள் கூட்டங்களில் பிரசங்கித்த, சுமார் **40க்கும்** அதிகமான **தேவ செய்திகள்** அடங்கிய DVDக்கள் வெளியிடப்பட்டது.

சுமார் **189 'இயேசு விடுவிக்கிறார்' கூட்ட நிகழ்ச்சி**களை ஒளிப்பதிவு செய்ய கர்த்தர் கிருபை செய்தார். சுமார் **57 'இயேசு விடுவிக்கிறார்' கூடுகைகள் நேரடி ஒளிபரப்பு** செய்யப்பட்டது. **New Media Academy-Batch II** துவங்கப்பட்டு, **18 மீடியா மிஷனெரி**கள் உருவாக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார்.

நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட **New Media Studio** மற்றும் **Edit Suite** மூலமாக, கர்த்தருடைய ஊழியம் மிக நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. இந்த New Media ஊழியப் பிரிவை, உலக நாடுகளின் எழுப்புதலுக்காக கர்த்தர் ஆயத்தப்படுத்தி, பயன்படுத்தி வருகிறார்.

## தகவல் தொழில் நுட்பத் துறை ஊழியம்!

'இயேசு விடுவிக்கிறார்'-தகவல் தொழில் நுட்பத் துறை ஊழியம், 2017 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 2018ம் வருடம் முழுவதும் நமது **இணைய தளத்தின் மூலமாக**, சுமார் **3,59,140** பேர்கள் தொடர்பு கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சுமார் **47,745** பேர்கள் நமது **E-Magazine** மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மேலும், **'குடும்ப ஆசீர்வாதத் திட்டம்!'**, **'இயேசுவின் கண்மணிகள் திட்டம்!'** மற்றும் **'இயேசுவின் சிநேகிதன்!'** போன்ற திட்டங்களில், ஆயிரக்கணக்கானோர் **Online** மூலமாக இணைந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

நடைபெற்ற எல்லா **திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** மற்றும் **விடுதலைப் பெருவிழா** கூட்டங்கள் **நேரடி ஒளிபரப்பு (LIVE)** செய்யப்பட்டது. இதை **Web TV** மூலமாக, சுமார் **7,98,144** பேர்களும், **Youtube** மூலமாக, சுமார் **2,12,77,562** பேர்களும், **Facebook** மூலமாக, சுமார் **1,20,978** பேர்களும் கண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

இணைய தளத்தின் மூலமாக, சுமார் **13,046** பேர்கள் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். நமது 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கையை புதிதாகப் பதிவு செய்யவும், முகவரி மாற்றம் செய்யவும், காணிக்கை அனுப்பவும், **Online.jesusredeems.com** என்கிற இணைய தளத்தை, சுமார் **10,310** பேர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

## கடித ஊழியம்!

சுமார் **4,04,720** பேர்கள் ஜெபத்திற்காக நமது ஊழியத்தோடு தொடர்பு கொண்டார்கள். சுமார் **1,70,500** பேர்கள் **கடிதம்** மூலமாகவும், சுமார் **8,500** பேர்கள் **ஆலோசனை ஜெப மையத்திற்கு** நேரில் வந்து ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்தும், **வெளி நாடுகளிலிருந்து**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் **2,108** பேர்கள் **கடிதம் மூலமாக** தொடர்பு கொண்டும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

**கிளை அலுவலகத்தின்** மூலமாக சுமார் **21,017** பேர்களும், பிற மொழிகளில் (**ஆங்கிலம், மலையாளம், கன்னடம், இந்தி, தெலுங்கு**) சுமார் **17,425** பேர்களும், **E-Mail** மூலமாக சுமார் **40,050** பேர்களும், **S.M.S.** மூலமாக சுமார் **15,550** பேர்களும் நமது ஊழியத்தோடு தொடர்பு கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். நடைபெற்ற திறப்பின் வாசல் உபவாச ஜெபங்களில் கலந்து கொண்டவர்களில், சுமார் **1,29,570** பேர்கள் ஜெப விண்ணப்பங்கள் எழுதிக் கொடுத்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

## பத்திரிக்கை ஊழியம்!

கடந்த 2018ம் வருடத்திலும், **தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிங்களம்** ஆகிய **7 மொழிகளில்** வெளியிடப்பட்ட நமது பத்திரிக்கைகள் மூலமாக, **இந்தியா** மற்றும் **50** வெளி நாடுகளிலுமாக, சுமார் **3,63,000**க்கும் அதிகமான குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன.

இந்தப் பத்திரிக்கை ஊழியத்தின் மூலமாக கர்த்தர் திரளான சாட்சிகளை எழுப்பினார். இந்த ஊழியத்தின் அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார்.

## ஒலி-ஒளி நாடா ஊழியம்!

சுமார் **6,000**க்கும் அதிகமான **பாடல் DVD, ACD** மற்றும் **MP3**க்கள், **தேவ செய்திகள்** அடங்கிய சுமார் **20,000**க்கும் அதிகமான **நாடகங்கள், பட்டிமன்றங்கள், Teli Serial**கள் அடங்கிய சுமார் **25,000**க்கும் அதிகமான **VCD** மற்றும் **DVD**க்கள், **600 Pendrive**கள், சுமார் **37,000**க்கும் அதிகமான **பரிசுப் பொருட்கள்** வினியோகம் செய்யப்பட்டன.

மட்டுமல்ல, **தமிழ், ஆங்கிலம், கன்னடம், இந்தி, தெலுங்கு** ஆகிய மொழிகளில், சுமார் **57,800**க்கும் அதிகமான **ஆவிக்குரிய புத்தகங்களும்**, சுமார் **35,000**க்கும் அதிகமான **பாடல் புத்தகங்களும்** வினியோகம் செய்யப்பட்டன. சுமார் **17,500 பரிசுத்த வேதாகமங்களும், விளக்கவுரைகளும்** வினியோகம் செய்யப்பட்டன. சுமார் **52,290** வாக்குத்தத்தக் **காலண்டர்**களும், சுமார் **7,104 Diary** மற்றும் **Planner** வினியோகம் செய்யப்பட்டன. மேலும், **திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, நாலுமாவடி** ஆகிய இடங்களில் **வேதாகமப் புத்தகக் கண்காட்சி** நடத்தவும், இந்த ஊழியத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார்.



## சமுதாய நலத் திட்டப் பணிகள்! (புது வாழ்வு சங்கம்)

நமது **'இயேசு விடுவிக்கிறார்'- புது வாழ்வு சங்கம்** மூலமாக, **இலவச மருத்துவ சேவை, குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், கல்வி நலத் திட்ட உதவிகள், மாற்றுத் திறனாளிகள், முதியோர், திருநங்கையர் முன்னேற்றப் பணிகள், கணினிப் பயிற்சி வகுப்புகள், கிராம முன்னேற்றப் பணிகள், பேரழிவு நிவாரணப் பணிகள்** மற்றும் **சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்புப் பணிகள்** சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, பல ஏழை-எளிய மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை உருவாக்க கர்த்தர் உதவி செய்தார்.

நமது புது வாழ்வு மருத்துவமனை ஊழியத்தின் மூலமாக, **தினந்தோறும் இலவச மருத்துவ சேவை** அளிக்கப்பட்டது. இதன் மூலமாக, சுமார் **10,000**க்கும் அதிகமான ஏழை


பல்நோக்கு மருத்துவ முகாம்

மக்கள் பயனடைந்தார்கள். சிறப்பு **கண் பரிசோதனை முகாம்கள், பல்நோக்கு மருத்துவ முகாம்**கள் மூலமாக எண்ணற்ற மக்கள் பயனடைந்தனர். பல ஏழை-எளிய மக்களுக்கு **இலவச அறுவை சிகிச்சை** மற்றும் **செயற்கை உபகரணங்கள்** கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. தேவ திட்டத்தின்படியே, **புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனை**யின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.

நமது புது வாழ்வு குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக, **250** ஏழை-எளிய **குழந்தைகள் பொறுப்பெடுக்கப்பட்டு**, அவர்களின் **கல்வி, உடல் நலம், ஆன்மீகம், சமுதாயத் தேவைகள்** சந்திக்கப்பட்டன. **கைவினைப் பொருட்கள் செய்தல், தையல் பயிற்சி, இசைப் பயிற்சி, தனித் திறன் பயிற்சி** போன்ற பயிற்சிகள் மூலமாக, குழந்தைகளும், பெற்றோர்களும் பயனடைந்தனர். இத்திட்டத்தின் மூலம், சுற்று வட்டாரக் கிராமங்களிலுள்ள ஏராளமான ஏழை-எளிய மக்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், அன்பையும் அறிந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது புது வாழ்வு அகாடமி (NEW LIFE ACADEMY) மூலமாக, நாலுமாவடி கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் எண்ணற்ற மக்கள், குறிப்பாக மாணவர்கள் சிறப்பான **கணினிப் பயிற்சி** பெற்றனர்.
கீழ மாதாபுரம்-**ஜெப மலை**யை மையமாக வைத்து, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **6 தாலுகாக்களில் 110 மகளிர் சுய உதவிக் குழுக்கள்** மூலம், பெண்கள் சமுதாயத்தில் முன்னேறவும், **குழுவாக ஜெபிக்க**வும், தங்கள் குடும்பத்தின் **பொருளாதாரத்தை உயர்த்த**வும் வழி வகை செய்து கொடுக்கப்பட்டது.

தகுதியுள்ள **100**க்கும் மேற்பட்ட ஏழைப் பிள்ளைகளின் **கல்வி சார்ந்த செலவுகள்** பொறுப்பெடுக்கப்பட்டது. இதன் மூலமாக, **பள்ளிக் கல்வி, மருத்துவம், பொறியியல், ஆசிரியர் பயிற்சி, இறையியல்** மற்றும் **தொழிற் கல்வித் துறை**களில் பல ஏழை மாணவர்கள் சிறப்பான கல்வி பெற்று வருகின்றனர். பல இடங்களில் **மாலை நேரக் கல்வி வகுப்புகள்** நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாதமும், **மாற்றுத் திறனாளிகள், முதியோர்** மற்றும் **விதவைகளின்** நலன் பேண, **சிறப்புக் கூடுகைகள்** நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதுடன், அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான அனேக **முன்னேற்றப் பணி**கள் செயல்படுத்தப் படுகின்றன. **திருநங்கையர்களுக்கான முன்னேற்றப் பணி**களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2018 இறுதியில் ஏற்பட்ட, **'தானே'** புயல், **கேரளா மாநிலத்தில் உண்டான பெருமழை வெள்ளம், 'கஜா'** புயல் போன்ற **இயற்கைப் பேரழிவு**களில், நமது புது வாழ்வு சங்கத்தின் மூலமாக, **பல லட்ச ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பணி**கள் மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டது. மேலும், விவசாயிகளின் நலன் காக்க, **ஏரி, கால்வாய் தூர்வாரப்** பட்டன. மேலும், பல **சுற்றுப் புறச் சூழல் சார்ந்த பணி**கள் செயல்படுத்தப்பட்டன. பண்டிகைக் காலங்களில், எண்ணற்ற ஏழை-எளிய மக்களுக்கு, கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, அவர்களுக்குப் **புத்தாடைகள், நலத் திட்ட உதவிகள்** மற்றும் **கிறிஸ்துமஸ் விருந்து** வழங்கப்பட்டது.

## நல்ல சமாரியன் சங்கம்!

நமது **'இயேசு விடுவிக்கிறார்'- 'நல்ல சமாரியன் சங்கம்!'** (Good Samaritan Club) மூலமாக, எண்ணற்ற பொது நலப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. **புதியதாக 12 இடங்களில்** நல்ல சமாரியன் சங்கம் ஆரம்பிக்கவும், செயல்பட்டுக் கொண்டிருக்கிற 37 சங்கங்களில் **மாதாந்திரக் குடும்பக் கூடுகை** மற்றும் வருடாந்திர மாநாடு நடத்தி, சங்கத்தின் உறுப்பினர்களை உற்சாகப்படுத்தவும், கர்த்தர் உதவி செய்தார்.

பல இயற்கைப் பேரிடர் அழிவின்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரம் நீட்டி, பல லட்ச ரூபாய் மதிப்பிலான **நிவாரணப் பொருட்கள்** வழங்கவும், **உறைவிடங்கள்** அமைத்துக் கொடுக்கவும், தேவன் கிருபை பாராட்டினார். பல ஏழை மாணவர்களில் **கல்விக்கான செலவீனங்களும், பள்ளிக் கழிப்பறை வசதி**களும் செய்து கொடுக்கப்பட்டது.

தேவையுள்ள இடங்களில் **சிறப்பு மருத்துவ முகாம்**களும், **இரத்த தான முகாம்**களும் நடத்தப்பட்டன. பல ஏழை-எளிய மக்களின் **வாழ்வாதாரத் தேவைகள்** பூர்த்தி செய்யப்பட்டது. பண்டிகைக் காலங்களில், சிறப்பு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அனேக தேவையுள்ள மக்களுக்கு, **புத்தாடைகள்** மற்றும் கிறிஸ்துமஸ் **'விருந்து'** அளித்து, கிறிஸ்துவின் அன்பும் சொல்லப்பட்டது. கடந்த 2018 ஆகஸ்டு மாதம் நடந்த வருடாந்திர மாநாட்டில், பல சங்கங்களில் இருந்து சுமார் **650** பேர் குடும்பமாகக் கலந்து கொண்டார்கள். மேலும், பல புதிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்காக **ஜெபியுங்கள்.**



மழை வெள்ள நிவாரணப் பணிகள் – கேரளா



இந்த ஊழியங்களுக்காக ஜெபித்தும், கொடுத்தும் தாங்கி வருகிற ஒவ்வொருவருக்கும், இந்த ஊழியத்தின் ஆசீர்வாதங்களில், நிச்சயமாகவே ஒரு பெரிய பங்கை கர்த்தர் வைத்திருக்கிறார். இந்த ஊழியத்திற்கான விலையேறப் பெற்ற உங்கள் ஜெபத்தை இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன். மட்டுமல்ல, கர்த்தருடைய இந்த ஊழியத்தை, ஏவப்படுகிறபடியே கொடுத்துத் தாங்குங்கள். நானும், நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியக் குடும்பத்தினரும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். கடந்த வருடம் முழுவதும் இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், பொருளுதவினாலும் தாங்கிய ஒவ்வொருவருக்கும், **இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்,**

**மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!**



- உங்கள் சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுடைய கூடாரம்!
# தேவ திட்டம்
# நிறைவேறுகிறது!




**தே**சத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும் தேவ பிள்ளைகள் மாதந்தோறும் பெருகிக் கொண்டு வந்தபடியினால், "பெரிய ஒரு இடத்தை வாங்கி, சுமார் 50,000 பேர் கூடி வந்து ஜெபிக்கும்படியான தேவனுடைய கூடாரத்தைக் கட்டு." என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

அது ஏராளமான பணம் செலவு செய்யக் கூடிய பெரிய ஒரு வேலையாக இருந்தபடியினால், நான் தயக்கம் காட்டினேன். அப்பொழுது கர்த்தரே ஒரு தேவ பிள்ளையின் மூலமாக 7½ ஏக்கர் நிலத்தை நமக்கு இலவசமாக வாங்கிக் கொடுத்தார். அப்பொழுது கர்த்தர், "நான் நிலத்தை தந்து விட்டேன், வேலையை ஆரம்பி!' என்று கட்டளையிட்டார்.

"ஆண்டவரே, அதற்கு கோடிக் கணக்கில் பணம் தேவைப்படுமே! நான் என்ன செய்ய முடியும்?" என்று கர்த்தரிடத்தில் கேட்டேன். அதற்கு கர்த்தர், "மோசேயைக் கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி முடித்த கர்த்தர் நான்! நானே இதைக் கட்டி முடித்துத் தருவேன்! நீ யாரிடத்திலும் போய் கேட்க வேண்டியது வராது. என்னால் ஏவப்பட்ட என் ஜனங்களைக் கொண்டு இதை நான் செய்து முடிப்பேன்! நான் உனக்குக் கொடுத்த ஊழியப் பொறுப்புகளை நீ நிறைவேற்று. இதை நான் செய்து முடிக்கிறேன்." என்று வாக்குக் கொடுத்தார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்து வேலையை ஆரம்பித்தோம். கர்த்தர் சொன்னபடி, தேவனுடைய கூடாரத்தை அவரே கட்டிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்கென்று நான் எங்கும் காணிக்கை கேட்டதில்லை, சேகரித்ததும் இல்லை. நம் திறப்பின் வாசல் ஜெபத்தில் கூட, இதற்காக ஒருமுறை கூட காணிக்கை எடுத்ததில்லை. ஏவப்பட்ட தேவ பிள்ளைகள் முன்வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் கொடுக்கக் கொடுக்க, தேவனுடைய கூடாரம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இம்மட்டும் உதவி செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

சுமார் 75% வேலைகள் முடிந்திருக்கிறது. இன்னும் 25% வேலைகள் இருக்கிறது. இந்த ஆண்டுக்குள் கர்த்தர் முடித்துத் தர வேண்டும் என்று ஜெபிக்கிறேன். நீங்களும் **ஜெபியுங்கள்.**

தேவனுடைய கூடாரத்தின் **முன் பக்கத்தில், 24 மணி நேரமும்** தேசத்திற்காக **ஜெபிக்கும்படியான 'ஜெப கோபுரம்'** கட்டப்பட **வேண்டும்.** இதற்கான கட்டுமான வேலைகளை ஆரம்பித்திருக்கிறோம். இது ஜெயமாக முடிக்கப்பட **ஜெபியுங்கள்.** கர்த்தர் உங்கள் உள்ளத்தில் **ஏவினால்,** அவர் சொல்கிறபடி **உங்கள் பங்குகளை அனுப்பலாம்!**

கர்த்தர் ஒரே நபரைக் கொண்டு தன் காரியத்தைச் செய்து முடிக்க முடியும்! ஆனால், **இந்த எழுப்புதலுக்கான தேவ திட்டத்தில் நம் எல்லோருடைய பங்கும் இருக்க வேண்டும்** என்றுதான், கர்த்தர் நமக்கு இந்த வாய்ப்பைத் தருகிறார். நானும் கூட, என் பங்காக மாதந்தோறும் தேவனுடைய கூடாரத்திற்குக் கொடுத்து வருகிறேன். மட்டுமல்ல, தேவ ஆலோசனையின்படியே, தேவனுடைய கூடாரத்திற்கு வரும் காணிக்கையில், வட இந்தியாவில் மாதத்தோறும் ஒரு கிராம தேவாலயத்தைக் கட்டி வருகிறோம்.

**இந்த தேவ திட்டத்தில் இணைந்து செயல்பட உங்களையும் அழைக்கிறேன்.** வாருங்கள், நாம் எழுந்து கட்டுவோம்!

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**- உங்கள் சகோதரன்.**

## காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152, 071 437 1111)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நமது சகோதரர் அவர்களின் (2019) பிப்ரவரி மாத ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தேச ஊழியங்கள்!



## ஆஸ்திரேலியாவில்

**In Perth - Australia**

**REVIVAL PRAYER NIGHT!**

நாள்: 2019
**பிப்ரவரி 6**, (புதன்கிழமை).
நேரம்: மாலை **7:00** மணி.
**இடம்:** Mt.Pleasant Baptist Church, 497 Marmion St, Booragoon WA 6154.

Contact: Sabina Fernando, 0061-433154401.

**In Sydney - Australia**

11 மணி நேர
**திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!**

நாள்: 2019
**பிப்ரவரி 9**, (சனிக்கிழமை).
நேரம்: காலை **9:00** - இரவு **8:00**.
**இடம்:** C3 Church Silverwater, 108 Silverwater Rd, Silverwater, NSW 2128.

**In Sydney - Australia**

**A NIGHT OF MIRACLES!**

நாள்: 2019
**பிப்ரவரி 10**, (ஞாயிற்றுக்கிழமை).
நேரம்: மாலை **6:00** மணி.
**இடம்:** Australian Tamil Church, Unit 1/12 Abbott Road, Seven Hills, NSW 2147.

Contact: Joel rose - 0061 - 421949920, Alan Jeyaraj - 0061 -402 693 623, Praveen - 0061 - 406 374 493.

**In Brisbane - Australia**

**REVIVAL PRAYER NIGHT!**

நாள்: 2019 **பிப்ரவரி 13**, (புதன்கிழமை).
நேரம்: மாலை **6:30** மணி.
இடம்: Hosanna Church, 65 Woogaroo St, Ellen Grove, Brisbane.

Contact: Shanthi Augustine - 0061-451155431.

## நியூசிலாந்தில்

**In Auckland - New zealand**

12 மணி நேர **திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!**

நாள்: 2019 **பிப்ரவரி 16**, (சனிக்கிழமை).
நேரம்: காலை **9:00** - இரவு **9:00**.
இடம்: Howick Community Church, 120 Picton Street, Howick, Auckland.

**In Hamilton - New zealand**

4 மணி நேர **திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!**

நாள்: 2019 **பிப்ரவரி 17**, (ஞாயிற்றுக்கிழமை).
நேரம்: மாலை **4:00** - இரவு **8:00**.
இடம்: Freedom Church, 3 Clow Place, Melville, Hamilton.

Contact: Jesus Redeems, New Zealand, 027-5263225, 021-02106173, 021-305074.



**தேவ செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்.**

'இயேசு விடுவிக்கிறார்'

# திருகோணமலையில்

# கெத்செமனே ஜெப மையம்!

நாள்: ஒவ்வொரு செவ்வாய்கிழமையும்
காலை 9:30 - மதியம் 2:00 மணிவரை.

## திறப்பின் வாசல் ஜெபம் நடைபெறும்

**தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!**

*Contact: 011-2930 152.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# அற்புதங்களைக் காண்பீர்கள்!



உங்கள் பிரச்சனைகள் மாற, உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்கள் வியாதி நீங்க, உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்கள் தேவைகள் சந்திக்கப்பட, உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்களுக்குத் தேவையான அற்புதங்களைச் செய்ய இயேசு கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார்! நீங்கள் அவரிடத்தில் கேட்க வேண்டும், அவ்வளவுதான்! கேட்டால், அற்புதங்களைக் காண்பீர்கள்! உங்களோடு சேர்ந்து உங்கள் அற்புதங்களுக்காக ஜெபிக்க, திறப்பின் வாசல் ஜெபம் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டது. அந்த நாளில் சுமார் 40,000க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கூடி வந்து ஜெபிக்கிறார்கள். கடந்த நாட்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் செய்த அற்புதங்களைப் பாருங்கள்:

## கேட்டேன், பெற்றுக் கொண்டேன்!



நான் படித்து முடித்து விட்டு, எத்தனையோ நேர்முகத் தேர்வுகளை சந்தித்தும், ஒரு **வேலை கிடைக்காமல்** மிகவும் கஷ்டப்பட்டேன். மனம் **சோர்ந்து போன நிலைமையில்**, திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு தொடர்ந்து ஜெபித்து வந்தேன். கர்த்தர் நான் **வேண்டிக் கொண்டபடியே**, நல்ல சம்பளத்தோடு கூடிய ஒரு **வேலையை** எனக்குக் **கொடுத்து**, என்னை ஆசீர்வதித்திருக்கிறார். - **K. அரவிந்த், கோவை.**

## கண்ணீரைக் கண்டார்!



என் பேத்தி **'டெங்கு'** காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு, **20 நாட்கள்** மருத்துவமனையில் இருந்தாள். **குடும்பமே கண்ணீரின் மத்தியில்** இருந்தது. திறப்பின் வாசல் ஜெபத்தில் அவளுக்காக ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அற்புதமான **சுகத்தை** அவளுக்குக் **கொடுத்து**, எங்கள் **கண்ணீரைத் துடைத்தார்**. – **சாமிப்பிள்ளை, திருப்பூர்.**

## நடக்கப் பண்ணினார்!



என் மகன் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அவனுடைய **கால்களில் மரத் தடி விழுந்து**, 2 கால்களும் பாதிக்கப்பட்டது. வலது காலின் கீழ் பகுதி ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்ட நிலையில், "இனி நான் பிழைக்க மாட்டேன்." என்று சொல்லி அழுதான். டாக்டர்களும், "உங்கள் மகன் நடப்பதற்கு 6 மாதங்களுக்கு மேல் ஆகும்." என்று சொல்லி விட்டார்கள். மட்டுமல்ல, என்னுடைய **சிறுநீரகப் பகுதியில்** இருந்த ஒரு **வலியினாலும்** கஷ்டப்பட்டேன்.

மிகுந்த பாரத்தோடு, நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் என் மகனை **சீக்கிரமாக நடக்கப் பண்ணி, என்னையும் சுகமாக்கினார்.** – **கன்னியம்மாள், கீழ தூதுகுழி.**

## அதிசயம் செய்தார்!

எனக்குத் திருமணமாகி 3 **வருடங்களுக்குள், 2 தடவை கருச் சிதைவு** ஏற்பட்ட நிலைமையில், குடும்பமாக திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தோம்.

அடுத்த மாதமே நான் கர்ப்பம் தரிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். பரிசோதனையில் 'இரட்டைக் குழந்தைகள்!' என தெரிய வந்தது.

6வது மாதம் பரிசோதனை செய்து பார்த்த டாக்டர், "**ஒரு குழந்த இறந்து விட்டது!** அடுத்த குழந்தை இரத்தக் கசிவோடு இருக்கிறது!

இறந்த குழந்தையின் நச்சுப் பொருள், அடுத்த குழந்தையும், தாயையும் பாதித்து விடக் கூடாது. 3 வாரங்கள் **bed rest** எடுத்து விட்டு வாருங்கள். கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள்." என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.



நாங்கள் உடனே நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்திற்கு வந்து, ஒரு பொருத்தனை செய்து ஜெபித்து விட்டுப் போனோம்.

பிரசவ நேரத்தில் பரிசோதித்துப் பார்த்த டாக்டர் மிகவும் ஆச்சரியப்பட்டு, "இது எப்படி நடந்தது? நான் எதிர்பார்க்கவே இல்லை! குழந்தை நல்ல வளர்ச்சியோடு, மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது." என்று சொல்லும்படியாக கர்த்தர் கிருபை செய்து, ஏற்ற வேளையில் அழகான ஒரு **பெண் குழந்தையைப் பெற்றெடுக்கவும்** எனக்கு உதவி செய்தார். – **பீரித்தி**, ஏரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபரேஷனில்லாமல் அற்புதம்!



என் மனைவியின் **மூக்கிற்குள்** சுமார் **7 வருடங்களாக ஒரு சதை** வளர்ந்து இருந்தது. சரியாக **சுவாசிக்க முடியாமல்**, கஷ்டப்பட்டாள். டாக்டர், "அதை ஆபரேஷன் செய்து எடுக்க, ₹ சுமார் 35,000/- வரை செலவாகும்." என்று சொன்னார். எங்களிடத்தில் அதற்குரிய **பண வசதியும் இல்லை.**

நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, அவளுக்காக ஒரு பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் அந்த **சதையை மறையப் பண்ணி**, அவளுக்கு **சுகத்தைக் கொடுத்தார்.**
**- வில்சன், திருவட்டார்.**

## பிரிந்தவர்களை இணைத்தார்!



என் சகோதரியும், அவளுடைய கணவரும் ஒரு பிரச்சனையின் நிமித்தமாக, **ஒரு வருடமாக பிரிந்து** வாழ்ந்தார்கள். நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஒரு பொருத்தனை செய்து, அவர்களுக்காக ஜெபித்தேன். அடுத்த ஒரு மாதத்திற்குள்ளாக **இருவரும் சேர்ந்து வாழ** கர்த்தர் கிருபை செய்தார்.
**- ஜாண்சன்**, மேல பட்டமுடையார்புரம்.

## 21 வருட, பிரச்சனை தீர்ந்தது!



எங்கள் உறவினர் மூலமாக உண்டான ஒரு **பிரச்சனையின்** நிமித்தமாக, **21 வருடங்களாக வேதனைப்பட்டோம். நீதிமன்றத்தில் வழக்கு** நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

மேலும், என் மூத்த மகள் கர்ப்பம் தரித்திருந்தபோது பரிசோதித்துப் பார்த்த டாக்டர், "**குழந்தை** எதாவது **குறைபாடு உள்ளதாகத்தான்** பிறக்கும். ஆகவே, கருச் சிதைவு செய்து விடுங்கள்." என்று சொன்னார்கள்.

நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஒரு பொருத்தனை செய்து, ஜெபித்து விட்டுப் போனோம்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, நீதி மன்றத்தின் மூலமாக **எங்கள் பக்கம் நியாயமான தீர்ப்பை** வரச் செய்து, **21 வருடப் பிரச்சனையை முடிவுக்குக்** கொண்டு வந்தார். மட்டுமல்ல, என் மகளுக்கும், **எந்த விதமான குறைபாடும் இல்லாத** அழகான ஒரு ஆண் **குழந்தையை** ஏற்ற வேளையில் **பெற்றெடுக்கவும்** கர்த்தர் கிருபை செய்தார். **- சின்னத்தம்பி, M. சவேரியார்புரம்.**

## அற்புதங்களின் தேவன்!



எனக்குத் திருமணமாகி **4 வருடங்களுக்குப் பிறகு**, ஒரு ஆண் **குழந்தை** பிறந்தது. குழந்தைக்கு **'மலம்' போகாமல்** இருந்தபடியினால், ஆபரேஷன் செய்த பிறகும் சரியாகவில்லை. **அடிக்கடி வயிறு ஊதி விடும்**. சுமார் **9 வருடங்களாக**, டாக்டர்களின் அறிவுரையின்படி , 'இனிமா' கொடுத்து, **மிகவும் கஷ்டப்பட்டுத்தான்** 'மலம்' கழிக்க வைத்துக் கொண்டிருந்தோம்.

டாக்டர்களும், "**இனி ஒன்றும் செய்ய முடியாது. இனி** உங்களுக்குக் குழந்தைகள் பிறந்தாலும், எதாவது ஒரு குறைபாடோடுதான் பிறக்கும்! ஆகவே நீங்கள் அதற்கான சிகிச்சை எடுக்க வேண்டும்." என்று சொன்னார்கள்.

இந்நிலையில், நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, தொடர்ந்து ஜெபித்தேன். மறுபடியும் நான் கர்ப்பம் தரிக்கக் கர்த்தர் கிருபை செய்து, **ஏற்ற வேளையில் எந்த விதமான பாதிப்பும் இல்லாத**, ஆரோக்கியமுள்ள அழகான ஒரு **பெண் குழந்தையை சுகப் பிரசவத்தில்** பெற்றெடுக்க, கிருபை செய்தார்.

என் **மகனுக்கும்** கர்த்தர் **அற்புதத்தைச் செய்து**, எங்கள் கண்ணீரைத் துடைத்தார்.
**- அருள் மேரி, தக்கலை.**

பாருங்கள், இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, **உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். **நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள்**. இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம். - உங்கள் சகோதரன்.

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெபம்!
**உங்கள் அற்புதத்தின் நாள்: 2019**
**ஜனவரி 26**
(கடைசி சனிக்கிழமை)

Address:
Standing in the Gap Prayer,
Nalumavadi-628 211,
Thoothukudi Dist., India.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு – திறப்பின் வாசல் ஜெபத்தில்

# தடைகளைத் தகர்த்த கர்த்தர்





கர்த்தருடைய கிருபையினால் கடந்த 2018ம் ஆண்டில் நடைபெற்ற எல்லா திறப்பின் வாசல் ஜெபங்களையும் தேவன் ஆசீர்வதித்து கொடுத்தார். டிசம்பர் 1ம் தேதி சனிக்கிழமை நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில் சுமார் 11 போதர்கள் மற்றும் 210 ஜெபவீரர்கள் கலந்து கொண்டு தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் சுபட்சத்திற்காகவும் திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுத்தனர்.

சகோ. **கிறிஸ்டி** குழுவினர் அவர்கள் பாடல் ஆராதனை வேளைகளை நடத்த சகோ. **சுரேஷ்** அவர்கள் தேசத்திற்காகவும், திருச்சபைகளுக்காகவும் கண்ணீரோடும் பாரத்தோடும் பிரார்த்ததனைகளை நடத்தினார்கள்.

இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்த மக்களுக்கு கர்த்தர் அற்புதங்களை செய்கிறார். அப்படி விடுதலை பெற்ற மக்கள் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினர்.

இறுதியில் சகோ. **ரூபன்** அவர்கள் தடைகளை உடைத்து ஜெயம் தரும் கர்த்தராகிய தேவனின் அதிசயங்களை செய்தியாக அறிவித்து ஜெபங்கள் ஏறெடுக்கும் போது கர்த்தர் பலத்த கிரியைகளைச் செய்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.



சகோ. கிறிஸ்டி



சகோ. சுரேஷ்



சகோ. ரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பின் வாசல் ஜெபத்தில் இயேசு கிறிஸ்து செய்து வருகிற அற்புதங்களில் சில...

### ஜெபத்தை கேட்டார்!

கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து நான் திறப்பின் வால் ஜெபத்தில் கலந்து கொள்கிறேன. நான் ஜெபத்தில் பங்கு பெறும் போதெல்லாம் என் மகனுடைய திருமணத்திற்காக விண்ணப்பம் எழுதிக் கொடுத்து ஜெபம் செய்வதுண்டு.

கடந்த 2018 மார்ச் மாதம் மகனுடைய திருமணம் சிறப்பாக நடைபெற கிருபை செய்தார். – சிரோண்மணி, மாபோல வத்தளை.

### குழந்தை பாக்கியம் தந்தார்!

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு வருகிறோம். ஒரு குழந்தைக்காக விசுவாசத்துடன் ஜெபித்து வந்தோம்.



ஜெப விண்ணப்பமும் எழுதிக் கொடுத்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு கிருபையாய ஓர் ஆண் குழந்தையை அருளி ஆசீர்வதித்துள்ளார். –நிஷா, மன்னார்.

### கடன் பிரச்சனையை மாற்றினார்!



நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கான வாடகைக் காலம் முடிவடையும் நிலையிலிருந்த போது தொடர்ந்து பணம் செலுத்த இயலாமையினால் மிகவும் நெருக்கப்பட்டோம்.
அத்துடன் 700,000 ரூபா கடன் பிரச்சனையும் இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் "இயேசு விடுவிக்கிறார்" மாதாந்த சஞ்சிகை ஒன்று எனக்கு கிடைத்தது. அதன் பின்னர் வத்தளை கெத்சமனே ஜெப மையத்திற்கு சென்று ஜெபம் செய்தேன் தேவன் ஜெபத்தைக் கேட்டு, அரைப்பகுதி கடனைக் கொடுத்து தீர்க்கவும், எங்கள் உறவினர் ஒருவர் மூலம் வீட்டுத் தேவைக்கான பணம் சந்திக்கப்படவும் தேவன் கிருபை செய்தார். – பேர்னடெத், எலககந்த

# கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2019

## பிப்ரவரி 2

(சனிக்கிழமை)

நேரம்: காலை 9:00 - மதியம் 2:00.

இடம்:

## Christ Church Hall, Galle Face,

(Near the Ramada Hotel.)

தேவ செய்தியும், ஜெபமும்:

## 'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்.

தேசத்திற்காக ஜெபிக்கவும்,
ஆசீர்வாதங்களைப்
பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

## கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.

முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Ph: 011-2930 152.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு!**

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680**
**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.**

இயேசு விடுவிக்கிறார்




அலுவலக நேரம் தினமும் காலை
9:00- மாலை 7:00 மணிவரை.

## கிளிநொச்சி

முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

## இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!** (புதன்கிழமைதோறும்) **12:00 P.M. - 3:00 P.M.**

**உபவாச ஜெபம்!** (சனிக்கிழமைதோறும்) **9:00 A.M. - 12:00 Noon**

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்! (ஞாயிற்றுக்கிழமைதோறும்) **3:00 P.M. - 4:00 P.M.**

**அற்புத விடுதலை பிரார்த்தனை!** (ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை) **5:00 P.M. - 7:00 P.M.**

**முழு இரவு ஜெபம்** (போயா நாளின் முந்தைய தினம்) **இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.**

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

வத்தளையில்

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

| பெண்கள் ஜெபம்! | உபவாச ஜெபம்! | குடும்ப ஆசீர்வாத கூடுகை! |
|---|---|---|
| (வியாழக்கிழமைதோறும்) | (சனிக்கிழமைதோறும்) | (ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று) |
| 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. |

சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் தேவ செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*
உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

# எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்!

| | | |
|---|---|---|
| திறப்பின் வாசல் உபவாச ஜெப முகாம்! | நாலுமாவடி | 2019 ஜனவரி 14, 15, 16 |
| பரிசுத்த உபவாச முகாம் | திருப்பத்தூர் | 2019 பிப்ரவரி 1, 2, 3 |
| தமிழ் கிறிஸ்தவ ஜெப மாநாடு! | சென்னை | 2019 பிப்ரவரி 24 |



| | | |
|---|---|---|
| தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை! | நாலுமாவடி | 2019 ஜனவரி 27 |
| | பெரம்பலூர் | 2019 பிப்ரவரி 2 |
| | வேலூர் | 2019 பிப்ரவரி 3 |



இந்த ஊழியங்களுக்காக
# ஜெபித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்**

சனிக் கிழமைதோறும் (காலை 7:30 - 8:00) -

**'குடும்ப ஆசீர்வாத நேரம்!'**

ஞாயிறுதோறும் (காலை 7:30- 8:00) -

**'உங்கள் அற்புதத்தின் நேரம்!'**

**சுவர்க டி.வியில்**

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல...

ஞாயிறு முதல் வெள்ளி வரை

காலை 7:30 - 8:00 மணிவரை.

**Dialog TVயில்**

*(God Channel)*

ஞாயிறு முதல் வெள்ளி வரை

காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின்

தேவ செய்திகளைக் கேட்டு,

*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA

Registered in the Department of Posts of Sri Lanka under QD/100/News/2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org